உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 8 } உருத்ரோத்காரிஸு வைகாசிமீ கஉ 1923ஸு மேமீ 14உ { பகுதி 11

## கடவுள் வணக்கம்.

எவ்வு யிர்த்திரளு முலகி லென்னுயி
　ரெனக்கு ழைந்துருகி நன்மையாய்
இதமு ரைப்பவென தென்ற யாவையு
　மெடுத்தெ றிந்துமத யானைபோல்
கவ்வை யற்றநடை பயில வன்பரடி
　கண்ட தேயருளின் வடிவமாக்
கண்ட யாவையு மகண்ட மென்னவிரு
　கைகு வித்துமலர் தூவியே
பவ்வ வெண்டிரை கொடுத்த தண்டரளம்
　விழியு திர்ப்பமொழி குளறியே
பாடி யாடியு ளுடைந்து டைந்தெழுது
　பாவை யொத்தசைத வின்றியே
திவ்ய வன்புருவ மாகி யன்பரொடு
　மின்ப வீட்டினி விருப்பனே
தெரிவ தற்கரிய பிரம மேயமல
　சிற்சு கோதய விலாசமே. (1)

நோக்கற் கரிதான நுண்ணியவான் மோனநிலை
தாக்கற் குபாயஞ் சமைத்தபிரான்—காக்குமுயி
ரத்தனைக்கு நானடிமை யாதலினால் யானெனதென்
றித்தனைக்கும் பேசவிட மில். (2)

ஒன்றுமற நில்லென் றுணர்த்தியநம் மோனகுரு
தன்றுணைத்தா ணீடூழி தாம்வாழ்க—வென்றென்றே
திக்கனைத்துங் கைகுவிக்குஞ் சின்மயராந் தன்மையர்க்கே
கைக்குவரு மின்பக் கனி. (3)

## அரும்பொருள் விளக்கம்.

1. குழைந்துருகி நன்மையாய் இதமுரைப்ப = (உலகினுள்ள எல்லா உயிர்களும் என் உயிரே யென்று பாவித்து எந்த உயிருக்கேனும் துன்பம் நேரிடக் கண்டால்) மனங்கசிந்துருகி அவைகளின் நன்மையைக் கருதி இதமான மொழிகளைக் கூற.

எனது என்ற யாவையும் எடுத்தெறிந்து=எனது என்ற சம்பந்த முடைய எல்லாவற்றையும் மனதினின்றும் நீக்கி, அதாவது சகல புறப் பற்றுக்களையும் ஒழித்து.

அன்பரடிகண்டதே அருளின்வடிவமா=அன்பர்களின் திருவடியைக் கண்டதே திருவருளைத் தரிசித்ததாகப் பாவித்து.

"சிவனடியாரைச் சிவனெனக் காண்பவன்
எவனவன் சிவனே" என்று இந்தச் சுவாமிகளே கூறியருளினர்.

கண்ட யாவையும் அகண்டமென்ன=காணும் எல்லாப் பொருள்களையும் அகண்டாகார சொரூபமேயென்று நிச்சயித்து

பவ்வ வெண்திரை கொடுத்த தண்தரளம்=கடலினது வெண்மையான அலைகளால் எறியப்பட்ட குளிர்ச்சியான முத்து (போன்ற நீர்த் துளிகள்)

எழுதுபாவை யொத்து=சித்திரத்தி லெழுதப்பட்ட பதுமைபோல்

சித்திரத்தி லெழுதப்பட்ட பதுமை உருவமாத்திரமாய்த் தோன்றுமேயன்றி உயிருள்ளவைபோல் அசைதல் முதலிய ஒன்றுமின்றி யிருக்கும்—அதுபோல் மனம் சற்றும் சலிக்காது அன்புருவமாய் ஆனந்த நிலையில் நிற்கவேண்டும் என்பதாம்.

"சித்திரத்தை யொத்துச் சிவோகமெனச் சிந்தித்தா
லத்தனுரு நீயாவை யால்" (வள்ளலார்)

"சித் சுக உதயம்" என்பது "சிற்சுகோதயம்" என்றாயிற்று. "ஞான சொரூபமாகிய ஆனந்தோதயம்" என்பது பொருள். பிரம்மானந்தம் முடிவில்லாது சதா சுகோதயமாகவே யுள்ளது.

ஜீவகாருண்யம், ஈசுரபக்தி, பாசவைராக்கியம், பிரம்மக்கியானம் இவை நான்கும் மோக்ஷமடைதற்கு வேண்டிய இன்றியமையாத சாதனங்களாம். இவற்றைப்பற்றியே இப்பாசுரம் கூறுகிறது.

"எவ்வுயிர்த் திரளுமுலகில்...இதமுரைப்ப" என்பது ஜீவகாருணியத்தையும்,

"எனதென்ற யாவையும் மதயானைபோல் எடுத்தெறிந்து" என்பது பாசவைராக்கியத்தையும்,

"அன்பரடி கண்டதே யருளின் வடிவமாக" என்பது ஈசுர பக்தியையும்,

"கண்ட யாவையும் அகண்டமென்ன" என்பது பிரம்மஞானத்தை யும் குறிக்கும்.

கைகூப்பி மலர்தூவல், கண்களில் நீர் துளித்தல், மொழிகுளறல், பாடல், ஆனந்தக்கூத்தாடுதல் முதலியவை பக்திப் பெருக்கால் உண்டாகும் ஆனந்த பரவசத்தின் குறிகளாகும்.

தாயுமான சுவாமிகளே,

"பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளைப்
பெறும்பேதை யறிவாளோ பேரா னந்தம்
உற்றவர்க்கே கண்ணீர்கம் பலையுண் டாகும்
உருதவரே கன்னெஞ்ச முடைய ராவார்" என்றருளினர்.

2. நோக்கற்கு=எதிரிட்டறிதற்கு.

தாக்கற்குபாயம் சமைத்தபிரான்=(மௌன நிலையை) யடைதற்கு வேண்டிய மார்க்கத்தை விதித்தருளிய பரமசிவம்.

"ஆண்டவனால் இரக்ஷிக்கப்பட்ட சகல சீவர்களுக்கும் நான் அடிமை" என்பது 'நான்' என்ற அகங்காரம் ஒழிந்த நிலையைக் குறிக்கிறது. எங்கே நான் என்பது மில்லையோ அங்கே எனது என்பதுமில்லை. ஆதலின் ஆங்காரமமகாரங்கள் என்னிடம் சேர இடமில்லை என்றார்.

3. ஒன்றுமற=சகல விகற்பங்களும் ஒழிய; தேகமுதல் நாதபரியந்தமுள்ள சகல தத்துவங்களும் நீங்க.

நில்லென்றுணர்த்திய நம் மோனகுரு=(ஆன்ம சாக்ஷாத்காரமாகிய நிலையில்) நில்லென்று (அந்நிலையை) அறிவித்த மௌனதேசிக சுவாமிகள்.

"எல்லா மிறந்த விடங்குரு வாங்குரு
சொல்லாமற் சொன்னதென் றுந்தீபற
சுத்த வெளியதென் றுந்தீபற" (சொரூப உந்தியார்)

திருமூல நாயனார் மரபில் வந்த மௌன தேசிக சுவாமிகளே தாயுமான சுவாமிகளின் ஆசாரியராவர். "தம் குருமூர்த்திகளிடம் பூரண பக்திவைத்துச் சதா வழிபடுவோர்க்குப் பிரம்ம சுகமாகிய கனி சித்திக்கும் என்பது கருத்து.

குருபக்தி பூரணமாக வுடையோர்க்குக் குருவே பரம்பொருளாம். யாவும் அக்குரு மயமாகவே காண்பர்.

"சிலரரனே யென்க சிலரயன்மா லென்க
சிலர் பரமஞ் சத்திசிவ மென்க—சிலர் பரம
மிங்குருவே யென்க வருவென்க வெவ்வுருவு
மெங்குருவே யென்றறிந்தோம் யாம்" என்றனர் தத்துவராய சுவாமிகள்.

# ஆனந்தபோதினி

உருத்ரோத்காரிஞூ வைகாசிமீ ௧௳

## சீவகாருண்யம்.

புண்ணிய பூமியாகிய நம் பாரத பூமியில் அனாதிகாலந் தொட்டுச் சீவகாருண்யம் அநுஷ்டிக்கப்பட்டு வருவது யாவரு மறிந்தவிஷயமே. இப்பூமியில் அவதரித்த மகான்களும் அதையே போதித்து வந்தார்கள். ஆனால் பிற்காலத்தில் இராஜாங்க மாறு தல்களால் சீவகாருண்யம் மங்கத்தொடங்கியது. இப்போது அதை நிலைநிறுத்தவேண்டுமென நம் நாட்டில் ஆங்காங்கு முயற்சி யெடுத்துக்கொள்ளப்படுகிறது. இதற்கென்றே பல சங்கங்கள் ஏற்பட்டு ஊக்கத்தோடு வேலைசெய்து வருகின்றன. அதன் பய னாகச் சில விடங்களில் சிறு தெய்வங்களுக்கு ஆடு, கோழி முத லியவற்றைப் பலியிடும் வழக்கம் நிறுத்தப்பட்ட தென்று தெரி கிறது. உயிருள்ள சீவன்களைக் கொன்று தின்னலாகாதென் பதைப்பற்றிப் பல வியாசங்கள் பத்திரிகைகளில் வெளிவந்திருக் கின்றன. அப்படியிருக்க நாமும் ஏன் இதை யெழுதவேண்டும் எனில், இத்தகைய விஷயத்தையும் சிலர் மறுத்து எழுதத் தொடங்குகிறார்கள். அதாவது சில நியாயமற்ற காரணங்களைக் காட்டி மிருக பட்சிகளைக் கொன்று தின்பது பாபமாகாது என்று கூறுகிறார்கள். நம்மவர்களுக்கு அதன் உண்மையை யெடுத்துக் காட்டி அவர்கள் அவற்றால் மயங்காவண்ணம் செய்யவே இதைப் பற்றி வரைய நேர்ந்தது.

சில மதஸ்தர் தங்கள் மதத்தில் மனிதர் தவிர மற்ற சீவன் களைக் கொல்வது பாபமல்ல என்று கூறப்பட்டிருப்பதாகக் கரு துகிறார்கள். ஆயினும் அம்மதத்திலேயே யுள்ளவர்களில் கடவுள் தன்மையை யுணர்ந்த விசால அறிவுடையோர் சிலர் அது பாப மென்றே கூறுகிறார்கள். அவ்வாறு செய்வதை விட்டுவிட்டு மிருக்

கிறார்கள். ஆனால் அத்தகைய அறிவு விளக்கமுடையோர் மிகச் சிலரேயாவர்.

உலகில் தான் செய்த குற்றத்தை "ஆம் நான் செய்வதாயினும் அது தவறே" என்று சாதாரணமாய் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அது உலக சுபாவம். ஒருவன் இன்னொருவன் செய்வதைக் குற்றமென்று சுலபமாய்க் கண்டித்து விடுவான். அதே குற்றத்தைத் தான் செய்தாலோ அது குற்றமல்ல என்று நிரூபிக்க முயல்வான். இவ்விஷயத்திலும் சிலர் அவ்வாறே முயல்கிறார்கள்.

ஒருவர் "அப்படிப்பட்ட கண்ணப்ப நாயனாரே பன்றி மாமிசத்தைப் பரமசிவனுக்கு நிவேதிக்கவில்லையா. அவருக்குச் சுவாமி மோக்ஷமளித்தாரே. அப்படியிருக்க சீவன்களைக் கொன்று தின்பது எப்படிப் பாபமாகும்?" என்கிறார். அந்தோ! இது எங்கேனும் காரணமாகுமோ? கண்ணப்ப நாயனாருக்கு அச்செய்கை பாபம் என்பதும் சாத்திரங்களால் கண்டிக்கப்பட்டதென்பதும் ஒன்றுமே தெரியாது. ஆண்டவனிடத்து வைத்த முழு அன்பு ஒன்றே அவருக்குத் தெரியும். அவர் செய்கை ஒரு விதியாய் அனுசரிக்கத்தக்கதாகாது. பட்டினத்தடிகள்கூட ஒரு சமயத்தில் புலைச்சேரி வழியே செல்லும்போது பசிவருத்த, ஒரு வீட்டின் முன் நின்று கையேந்தினர். அச்சமயம் அவ்வீட்டில் மாட்டிறைச்சி வெந்துகொண் டிருந்தது. அதில் ஒரு துண்டு அவர் கரத்தில் அளிக்கப்பட அவர் அதைப் புசித்தார் என்று கூறப்பட்டிருக்கிறது. அதனாலேயே யாவரும் அப்படிச் செய்வது பாவமல்ல என்றர்த்தமாகுமோ? அவர் மனநிலைமையென்ன? அவருக்குத் தாம் புசிப்பது மாட்டிறைச்சி என்ற உணர்ச்சியேயில்லை. அவருக்கு எல்லாம் அகண்ட பரமசிவ சொரூபமே. அவரைத் தொடர்ந்து சென்ற பத்திரகிரி அரசர் அச்செய்கையைக்கண்டு அருவருப்படைந்ததை யுணர்ந்து சுவாமிகள் தாம் பொசித்ததைக் கக்கியபோது, அலரி மலர்களே வெளிவந்தன வென்பதால் அவர் நிலைமை விளங்கும்.

ஒருவர் "நாம் ஒருபோதும் ஒன்றையும் கொல்லாமலிருக்கவே முடியாது. நடந்து போகும்போது எத்தனையோ பூச்சி புழுக்களை மிதித்துக்கொன்று விடுகிறோம்." என்கிறார். ஆகையால் எதையும் கொன்று தின்பது பாபமல்ல என்பது அவர்

கருத்து. இது கர்மத்தின் தன்மையே யின்னதென்றறியாக்குற்ற மாகும். கர்மத்திற்கு மனமே காரணம். மனம் பற்றாதகர்மம் புண்ணியமாயினும் பாபமாயினும் சிவனைப்பற்றாது. எவ்விதப் பயனையுமளிக்காது. ஒருவன் தேகத்தில் கத்தியால் கொஞ்சம் கீறினால் அவன் எவ்வளவோ வேதனைப்படுவான். அது பாபச் செயலேயாகும். இரணவைத்தியர் ஒருவன் தேகத்தில் ஒரு பாகத்தையே துண்டித்து விடுகிறார். அவன் துடி துடித்து விடு கிறான். அவருக்கு அதனால் பாபம் உண்டாகுமோ? ஒருபோது மில்லை. ஏனெனில் அவர் மனநோக்கம் அவனுக்கு நன்மை செய்யவேண்டுமென்பதே.

ஒருவர் "இப்போது தாவரங்களுக்கும் உயிர் இருக்கிற தென்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் காய்கனி இலைகளைத் தின்பதும் சீவஇம்சை செய்வதாகும். இத்தகை உயிர்கள் பலவற்றை ஒருநாளில் பொசித்துவிடுகிறோம். அப் படியிருக்க ஒரு ஆடு அல்லது கோழியைக்கொல்வது பாப மாகாது" என்கிறார்.

இது மிக்க நேர்த்தியான காரணமே. தாவரங்களுக்கு உயிர் இருப்பதை யிவர் இப்போதுதான் அறிவார் போலும். அனாதி தொட்டே நம் முன்னோர் தாவரங்கள் ஓரறிவு (பரிசம்) மட்டும் உடைய உயிர்கள் என்று அறிந்து கூறியிருக்கிறார்கள். அதோடு அவற்றின் இலை காய் மலர் கனி முதலியவற்றைப்பறிப்பது நமது உரோமம் நகம் இவற்றைக் கத்தரித்தெடுப்பதுபோல், என்றும், அதனால் அவற்றிற்கு வருத்தமுண்டாவதில்லையென்றும் கூறியிருக் கிறார்கள். இந்திரியங்கள் கரணங்கள் இவற்றோடு சம்பந்தப்பட் டுள்ள ஆன்மாவிற்கே சுகதுக்கம் முதலிய உணர்ச்சியுண்டு.

சிலர் கடவுள் மனிதன் தின்பதற்காகவே மற்ற பிராணி களைச் சிருட்டித்திருக்கிறார் என்று கருதுகிறார்கள். கருணையே சொரூபமாக உடைய கடவுள் எங்கேனும் அவ்வாறு செய் வாரோ. அப்படியாயின் எல்லாவற்றையும் ஏன் மனிதர் பொசிக்க லாகாது? எப்போதும் மாமிசபக்ஷணம் செய்வோர்களில் சிலர் மாடு தின்னக்கூடாது என்றும், சிலர் பன்றி தின்னலாகாதென் றும், நாய், கழுதை, ஒற்றைக் குளம்புள்ளவைகள் இவற்றைத் தின்னலாகாதென்றும், இத்தகைய விதி நிஷேதங்களை யனுசரிப் பானேன்? மேலும் ஆண்டவன் மனிதனுடைய ஆகாரத்திற்கு

ஏராளமான தாவரப்பொருள்களைச் சிருட்டித்து அவற்றைப் பல வித ருசியுள்ள ஆகாரங்களாகச் செய்துகொள்ள அறிவையுமளித்திருக்க, உயிரும் சுகதுக்க உணர்ச்சியு முடையவைகளாகத் தாம் சிருட்டித்த வாயில்லாப் பரிதாபமான பிராணிகளைக் கொன்று தின்னும்படி எங்கேனும் கருதுவாரோ? அவ்வாறு நாம் கருதுவதே அவர் கருணையை நிந்திப்பதாகுமன்றோ. அவ்வாறு கருதுபவரை நாம் கருணா சொரூபி யென்று எப்படி நம்புவது.

சிலர் அரசனுக்கு வேட்டையாடுவது தருமம் என்கிறார்கள். குடிகளின் பயிர்களை யழிக்காவண்ணம் காப்பாற்றும்பொருட்டு க்ஷத்திரியனாகிய அரசன் வேட்டையாடுவது அவன் தருமமாகும். பிரஜாபரிபாலனத்திற்காகப் பிரஜைகளின் உயிர்களையும் பொருள்களையும் காப்பதற்கு யுத்தகளத்தில் போர்செய்து எதிரியைச் சங்கரிக்கவேண்டியது க்ஷத்திரியன் தருமமாகுமென்று பகவான் கீதையில் கூறி யருளினரேயன்றி மாமிசபட்சணம் செய்ய ஆடு கோழிகளை வதைப்பது ஒருபோதும் எவ்வித தருமமுமாகாது.

இது சீவச் செயலன்றி ஒருபோதும் ஈசுர சம்மதமானதாகாது. கர்மகாண்டத்தில் சில பலிகள் முதலியவற்றைக் கூறியிருக்கின்றனவெனின், அவை யாவர்க்கும் விதியல்ல. எக்காலத்திலும் உலகத்தில் எல்லாரும் ஞானத்தை யேற்றுக்கொள்ளும் பக்குவிகளாகவே யிருக்கமாட்டார்கள். ஆகையால் மந்தமதியினரும் படிப்படியாய் மேல்நிலைக்கு வரும் வண்ணம் கூறப்பட்டதன்றி சீவ இம்சை செய்வது ஒருபோதும் எக்காரணத்தாலும் அங்கீகரிக்கப்பட்டதல்ல. அதற்கு மாறாகக் கடுமையாய்க் கண்டிக்கப் பட்டதே.

"கள்ளூ னூனீ விரும்பினுன் மகங்கள் செய் காமத்தின் மனதானல்
கொள்ளும் பெண்டொடு கலவிசெய் யெனிலிவன் குறையெலாந்
[தொடானென்றே
தள்ளும் வேதத்தின் சம்மதஞ் சகலமுந் தவிர்வதே கருத்தாதும்
விள்ளு மிவ்விதி யென்னெனிற் பூருவ நியமமாம் விதியன்றே"
(கைவல்லியம்)

"கடவுளுக்கு எல்லா மதமும் சம்மதமே, எல்லா மதங்களிலும் இருந்து யார் யார் எவ்வெவ்விதமாக உபாசித்தாலும் அவற்றை ஏற்றுக்கொண்டு அவரவர்கட்குத் தக்கவாறு அருள்புரிபவர் ஒருவரே" என்று நாம் வரைந்தபோது, இரண்டொருவர் அதைக் கண்டித்து "உலகில் ஒரு மதமே கடவுள் உண்டாக்கிய

தாகவிருக்கும், மற்ற மதங்களும் அவற்றில் கூறப்பட்ட கடவுளரும் பொய்" என்கிறார்கள்.

இவர்கள் மதாபிமானத்தால் குறுகிய மதிகொண்டு இவ்வாறு கூறுவதன்றி வேறில்லை. உலகில் பல மதங்களிருக்கின்றன. ஒன்று முன்னும் ஒன்று பின்னுமா யுண்டாயிருக்கின்றன. இவற்றில் ஒவ்வொருவரும் தங்கள் மதமே கடவுளால் உண்டாக்கப்பட்டது என்கிறார்கள். இதற்கு முடிவெப்படி என்பதையிவர்கள் பாரபட்சமின்றித் துவேஷ புத்தியின்றிச் சிந்தித்தால் இவ்வாறு கூறத் துணியார்கள். ஆனால் அன்னிய மதத்தவர்களிலேயே பேதபுத்தியில்லாது அகன்ற அறிவும் உண்மையை யறியும் ஆற்றலுமுடையோர் மேற்கண்ட கொள்கையையே வெளியிடுகின்றனர். அவ்வாறே ஜீவ இம்சை பாதகம் என்பதையோர்ந்து புலாலுண்பதையே விட்டொழித்தோரும் பலர் உளர். அவர்கள் மதத்தைச் சேர்ந்த மற்றையர்கள் அவர்களை நிந்திப்பார்கள். பெரும்பாலோர் நிர்வாணிகளாகவிருக்கும் இடத்தில் ஒருவன் கோவண மணிந்து கொள்வதே நாணயம் என்று கூறினால் அவனைப் பைத்தியம் பிடித்தவன் என்பார்களன்றோ. மகான்கள் உயர்ந்த உண்மைகளை யுபதேசித்தபோது அவற்றை யறிந்து கொள்ளும் அறிவில்லாததாலேயே உலகோர் அவர்களைப் படாத பாடுபடுத்தினார்கள். குறுகிய நோக்கமுடைய உலகிற்கு இது சுபாவமே.

நமது மதக்கொள்கை குறுகிய நோக்கமுடையதல்ல; அழியாத சத்தியத்தை அஸ்திவாரமாக வுடையது. அதனால்,

"விரிவிலா வறிவினர்கள் வேறொரு சமயஞ்செய்தே
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாமே"

என்றும்,

"அறுசமயக்கூத்துமாடி நின்றாயே" என்றும்,

"சமயமெலாந் தொடர்ந்து புகுமாதி நட்பே" என்றும்,

இன்னும் பலவாறாகவும் கூறியுள்ளார்கள்.

ஜீவகாருண்யம் என்பது நமது மதக்கொள்கையின்படி மோக்ஷத்திற்கு வேண்டிய நான்கு சாதனங்களில் முதலாவதாகும். இதற்கு இரண்டாவதே ஈசுரபக்தி. பாசவைராக்கியம் பிரம்மக்கியானம் இரண்டும் பிற்பட்டவை.

ஒரு ஜீவனைக்கொன்று தின்னாமலிருப்பதோடேயே ஜீவகாருண்யம் பூரணமாய்விட்டதாகக் கருதலாகாது. சில வகுப்

பார், தாங்கள் மாமிசம் பொசிக்காததாலேயே தாங்கள் சீவகாருண்யமுடையவர்களென்று கருதிக்கொள்கிறார்கள். ஒருவன் பட்டினியால் மடிவதாயினும் ஒருபிடி அன்னமளிக்கமாட்டார்கள். ஒரு பிச்சைக்காரனுக்கு ஒரு காசு கொடுக்கமாட்டார்கள். இதுவா சீவகாருண்யம்! தருமம் என்பது சீவகாருண்யத்தைப் பொருந்தியதே. சிலர் தங்கள் ஜாதியாருக்கு மட்டும் பிட்சையளிப்பார்கள். வாலாஜா நகரில் ஒரு வைஷ்ணவர் இருந்தார். அவர் பிச்சைக்காரன் தம் வீட்டிற்கு வந்தால் சட்டென்றுபோய் அவன் நெற்றியைப் பார்ப்பார். அவன் திருமண் அணிந்திருந்தால் பிட்சையளிக்கப்படும். அப்படிக்கின்றி அவன் விபூதியணிந்திருந்தானே, தடியடியும் வசை மொழியுமே பெற்றுக்கொண்டோடவேண்டும். இதெல்லாம் சீவகாருண்யமாகாது.

சீவகாருண்ய முடையோர் எந்தச்சீவனுக்கும் எவ்வித இம்சையுமளிக்கலாகாது; பிற சீவன்கள் துன்பப்படுவதைக் கண்டதே மனம் வருந்தவேண்டும். வருந்தித் தம்மாலியன்றவரையத்துன்பத்தை நீக்க முயலவேண்டும். இதுதான் ஜீவகாருண்யம். இன்னொரு ஜந்துவின் பிராணனுக்காகத் தம் பிராணனைக்கொடுத்தவர்களுமுண்டு. இவ்விஷயத்தில் ஜாதிமதம் உயர்வு தாழ்வு சிறிது பெரிது முதலிய எவ்வித வித்தியாசமும் கருதாமல் ஆண்டவன் படைத்த எல்லா சீவராசிகளிடத்தும் கருணை காட்டவேண்டும். சீவகாருண்யம் என்பது மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரிடமும் எப்போதும் நிலையாயிருக்கவேண்டிய குணமாகும். அஃதில்லாதவர்கள் மனிதரில் மிருகமாவர். அத்தகையோர்க்கு ஈசுவரன் அருளும் கிட்டாது. அதனுனே பொய்யா மொழியார்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்" என்றும்,
"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை" என்றும் அருளினர்.

ஓம் தத்ஸத்.

---

## ஏழு வருட அநுபவம்.

ஐரோப்பா கண்டத்து ஓர்பாகமாகிய பிராஞ்சுதேசத்திற் பிறந்து வளர்ந்து தன் ஜீவியகால முழுமையும் யாத்திரையிலேயே செலவழித்த சொனேரா (Sonnerae) என்பவரால் இயற்றி அச்சிடப்பெற்ற ஓர் புத்தகத்தின் முதற் பகுதியில் சில ஏடுகள் எனக்குக்கிடைத்தன. அவ்வேடு

களின் எழுத்துக்களையும் வசனங்களையும் நோக்குமிடத்து அவைகள் சுமார் நூறுவருடங்களுக்கு முன் அச்சிடப் பெற்றனவையா யிருக்க வேண்டுமெனத் தெரியவருகின்றன. நான் அவ்வேடுகளை வாசிக்கும்போது என்னை யறியாமலே என் கண்களினின்றும் நீர் ஆறுய்ப்பெருகியோடிற்று. அதன் காரணம் பின்னால் தெரியவருமாதலால் அவர் கூறி யிருப்பதை ஈண்டு அப்படியே தமிழில் மொழி பெயர்த்தெழுதுகிறேன் :—

"என் ஜீவியகாலத்தில் பெரும்பாகம் யாத்திரையிலேயே செலவழிக்க நேர்ந்தது. அப்போது நான் இந்தியாவுக்குச் சென்று அங்குள்ள அறிஞர்களுடன் எழுவருடங்கள் கழிக்கும் பாக்கியம் பெற்றேன். ஆகா என்ன அழகானநாடு! இந்தியாவில் பிறந்து இந்தியாவில் மரிப்பவன் பெரும் பாக்கியம் பெற்றவனாகிறான். இந்தியர் தங்கள் உணவுப்பொருள்களுக்காகக் கடினவேலைசெய்து தங்கள் வியர்வையை வீணே நிலத்தில் சிந்தவிட வேண்டிய அவசியமில்லை; அவர்களுடைய ஜன்மபூமி அவ்வளவு செல்வம் பொருந்தியதா யிருக்கிறது. மிஸ்டர்ஸ் லின்னே (Linne) பெல்லி (Bailly) என்பவர்கள் எழுதியிருக்கும் ஒரு புத்தகத்தில் சிபேரி (Siberie) தேசமே உலகத்தில் மிக்க செல்வம் பொருந்திய நாடு என்று கூறியிருக்க வாசித்திருக்கிறேன். அதற்காக அவர்கள் கூறும் காரணமாவது: சிபேரி தேசத்தில் கோதுமை அதிகமாய் விளைகிறதென்பதே. கோதுமைமட்டும் விளைந்துவிட்டால் போதுமா? நம் தேசத்தாருக்கு முக்கியமாய் வேண்டியது கோதுமையே என்பதை நானும் ஏற்றுக்கொள்ளுகிறேன். நமது காலத்திலேயே உலகத்தில் ரொட்டியில்லாமல் பெருந்தொகையான பிரஜைகள் ஜீவித்து வருவதைக் காண்கிறோம். ஏஷியா கண்டத்து ஜனங்களுக்கு அரிசியே பிரதானம். அவர்களுக்கு உணவு அரிசியே. மேலும் சிபேரிமட்டுமோ அவ்வளவு கோதுமை கொடுக்கிறதென்று பார்க்கப்போனால் அது தானுமில்லை. சிஸீல் (Sicile) தீவும் அதே வருமானந்தான் கொடுக்கின்றது. ஆகையால் இவர்கள் கூறும் காரணம் பொருத்தமுடையதன்று. இந்த அனுவசியமான வாக்குவாதங்களையெல்லாம் விடுத்து உய்த்துணருவோமாயின் உலகத்தின்கண் உண்மையாய் வளம்பொருந்திப் பிரகாசிக்கும் நாடு இந்தியாவேயெனத் தெற்றென விளங்கும். இந்தியாவைவிட மற்ற எந்த நாடும் அவ்வளவு வருமானங் கொடுக்கவில்லை யென்று நான் நிச்சயமாய்க் கூறுவேன்.

ஒவ்வொரு தேசத்தாரும் முன்னேற்றமடையும் வழியில் முயற்சித்து வருகின்றனர். ஆனால் இந்தியரோ தாங்கள் அடைந்திருக்கும் பூரண முன்னேற்றத்தினின்றும் கீழிறங்கி வருகின்றனர். பூர்வீகத்தில் வசித்து வந்தவர்கள் இந்தியரையே பூலோகத்தில் நாகரீகமடைந்திருந்த நாட்டினரில் முதல்வகுப்பினராக மதித்து வந்தனர். இதனைத் தெளிவுபடுத்த அவர்களுடைய ஆசாரங்களையும், அனேகமாயிரம் வருடங்களுக்குமுன் எழுதிவைத்த நூல்களையும் தவிர பிரசாக்ஷியங்கள் தேவையில்லை. இப்போது அவரவர்கள் தங்கள் ஆசாரங்களினின்றும் தவறி நிற்கின்றனர்.

உதாரணமாக பிராமணர்களை எடுத்துக்கொள்வோம். இவர்களே அத்தேசத்தில் உயர்ந்த வகுப்பினராக மதிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களுக்குத் தொழில் வேதமோதுவது. இன்றைக்கும் இவர்கள் வேதமோதிக்கொண்டுதா னிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் கூறும் மந்திரங்களுக்கு இவர்களில் பெரும்பாலாருக்கே பொருள் தெரியாதென்று கூற என் வாய் கூசாது. இந்தியர் வேதம் பிராமணர்களைப்பற்றிக் கோஷிப்பதாவது: 'பிராமணன் எப்பொழுதும்—எந்த நேரத்திலும்—பரிசுத்தமான மனதுடனிருக்கவேண்டும். கடவுள் தியானம் ஒரு நிமிஷ நேரமேனும் அவன் மனதைவிட்டு அகன்றிருத்தல் கூடாது. பஞ்சமாபாதகங்களினின்றும் அவன் வெகுதூரத்திற்கப்பால் விலகியிருக்கவேண்டும். நாளைக்கு வேண்டுமேயென்று ஒரு பிடி அரிசியேனும் மீதி வைத்தல்கூடாது' என்பதே. ஆனால் இதைப்போல் ஒருநாளேனும் கடைப்பிடித்தொழுகும் பிராமணர்களைக் காண்பதுதான் அரிதாயிருக்கிறது.

பண்டைக்காலத்தில் புத்திக்கூர்மையில் மிகவும் பிரக்யாதி பெற்றிருந்தவர்களாகக் கருதப்பட்டிருந்த எகிப்த் தேசத்தாரிடம், தன் ஜன்ம தேசமாகிய கிரீக்தேசத்தை விட்டுச் சென்று, தன் அறிவை விசாலப்படுத்திக்கொண்ட பித்தாகோர் (Pythagore) என்பவர் இயற்றிய நூல்களே எல்லாச் சாஸ்திரங்களுக்கும் அஸ்திவாரமா யிருக்கின்றனவென்று தற்போது வெளிவந்துலவும் சில புத்தகங்களில் காண்கிறேன். இது முற்றுந் தவறு. செமிராமிஸ் (Semiramis), செஜோஸ்திரீஸ் (Sesostris), அலெக்ஸாண்டர் (Alexander), முதலியோரும் இன்னும் இவர்களுக்கு முன் அனேகரும் இந்தியாவின் அளவற்ற சாஸ்திரங்களையும், செல்வத்தையும் உணராதிருந்திருந்தால் தங்கள் ஆயுதங்களை அதன்முன் பிரயோகித்திரார்கள். நம் தேசத்தார் மரங்களின்மீதும், புதர்களிலும், குகைகளிலும் வசித்துக்கொண்டு காட்டு மிருகங்களைப்போல ஒருவரை யொருவர் அடித்து, மாமிசத்தை அனலில் வதக்கிப் புசித்துக்கொண்டிருந்த அந்தக் காலத்திலேயே—அனேகம்நூற்றாண்டுகளுக்கு முன்னாலேயே—எல்லாத் தேசத்தாரும் அந்த வெற்றிச் சிங்கங்களாகிய இந்தியரின் முன் சாஸ்திர ஆராய்ச்சி செய்துகொள்ளவும் பொருள் சேகரித்துக்கொள்ளவும் ஓடினர்.

தருமநெறி தவறாத சுத்தவீரனான சத்தியராமன் அவதரிப்பதற்குமுன்னாலேயே (4900 வருடங்களுக்குமுன்) இந்தியர் தற்போதிருப்பதைவிடக் கல்வியினும் முன்னேற்றத்திலும் முதன்மை பெற்றிருந்தார்களென்பதை நிரூபிக்க அவர்களால் இயற்றப்பட்டிருக்கும் புத்தகங்களே போதுமான அத்தாக்ஷி. ஆகா, அதிர்ஷ்டசாலிகள்! அருமையான பாஷை! மாணிக்கம்போன்ற புத்தகங்கள்! நமது தேசத்தில் திகழ்ந்துலவும் நூல்களையெல்லாஞ் சேர்த்து அவர்களால் அற்பமென்று கருதப்படும் ஒரு நூலுக்கு ஒப்பிடின் அவர்கள் அற்பநூலே பாவற்றினும் மேலானதான அரிய விஷயங்கள் அடங்கியிருக்கக் காணலாம்.• அவர்கள் நூல்கள் முழுமையும் கடவுள் பக்தியே அடங்கியதாயிருக்கிறது. அந்நூல்களில் அடங்கி

யிருக்கும் விஷயங்கள் நிமிஷத்திற்கு நிமிஷம் மானிடரைப் பரவசப்படுத்தியும் துயரக்கடலிலாழ்த்தியும் பொறுமையிலும் நன்னடக்கையிலும் பிரவேசிக்கச் செய்கின்றன.

சல்ஸேத் (Salcette) எல்லோரா (Ellora) கோவில்களைக் கவனிப்போமாயின் அனேகமாயிரம் வருடங்களுக்குமேல் செல்லவேண்டிவரும். அக்கோவில்களைக் கட்டும்போது கடலானது, கீழ்க்காற்றுடி மலையையும் மேற்காற்றுடி மலையையும் மோதிக்கொண்டிருந்ததாம். இதன்படி எத்தனை ஆயிரம் வருடங்கள்தான் சென்றிரா? அக்காலத்திலேயே அவர்கள் அத்தகைய அழகானவையும் சிற்பத் திறம் வாய்ந்தவையுமான கோவில்கள் கட்டுதற்குரிய சக்திவாய்ந்திருந்தார்களென்பதைக் கேள்விப்படும்போது, அவர்கள் எந்தச் சாஸ்திரத்தில்தான் தேர்ச்சி பெற்றிரார்களென்று துணிந்து கூற முன் வர முடியும்? இந்த அனுவஷியமான கேள்விகளை யெல்லாம் விடுத்து, 'இந்தியாவில் இப்போது கீழே விழுந்து தத்தளித்து நிற்கும் ஆசாரங்களை உய்த்துணருவோமாயின் இன்னும் அவைகளில் முழு முன்னேற்றமடைந்த சில கோடுகள் தென்படக் காணலாம்.

இந்தியா ஞானத்திற்குத் தாயகமானது. இந்தியாவில் வசிப்பவர்களில் பெரும்பாலார் எப்பொழுதும் கடவுள் தியானத்திலேயே மூழ்கி நிற்கின்றனர். அவர்கள் அதையே மானிடர் அடையவேண்டிய பெரும்பேருக மதித்து வருகின்றனர். இந்தியாவே பிற மதத்தாருக்குத் தன் மதத்தை அஸ்திவாரமாகக் கொடுத்திருக்கிறதென்று என் அனுபவத்திலறிந்தேன். இந்தியாவில் மிகவும் மேலானவனுகக் கருதப்படுபவன் ஞானி. அவனைக் கடவுளாகவே மதிக்கின்றனர். அவன் கௌபீனத்தோடு வசிக்கிறுன். அவனுக்கு பூமியே வீடாகவும் வானமே வீட்டின் மேற் கூரையாகவு மிருக்கிறது. அவன் குளிர் உஷ்ணம் என்பவற்றைக் கவனிப்பதில்லை. பிறருடன் அதிகமாய்ச் சம்பாஷிப்பதில்லை. விக்ரஹ ஆராதனை செய்வதில்லை. வேதங்களையும் புராணங்களையும் புரட்டிக்கொண்டிருப்பதில்லை. பெண்ணிடத்தும் பொன்னிடத்தும் இச்சைவைப்பதில்லை. அவன் நோக்கம் முழுதும் பிணி, மூப்பு, துன்பம் நிறைந்த பிறவியொழிக்கவேண்டுமென்பதே. அதற்காக அவன் குரங்குக்குச் சமானமான தன் மனதை ஒரு வயப்படுத்த முயலுகிறுன். மனதை வயப்படுத்துவது சுலபமான காரியமல்ல. அதைக் கூறவேண்டுமாயின் அதற்காக ஒரு தனி நூல் எழுதவேண்டிவரும். அதற்குக் காலமும் வேண்டும். இந்தியாவில் இதுபோன்ற நூல்கள் நூற்றுக்கணக்கா யெடுக்கலாம். ஞானியானவன் என்றைக்கும் சாதுவாயிருக்கிறுன். அவன் முகத்தில் ஒரு தேஜஸ் ஜ்வலித்துக்கொண்டிருக்கிறது. தோற்ற ஒடுக்கமற்று அனுதியாய் எங்கும் ஏகமாய் நிறைந்து விளங்கும் பரமான்மாவையே அவன் வணங்குகிறுன். இதுவே அவன் அடையவேண்டிய இன்பம். அவன் ஏகாக்ர நிலையடைந்தபோது அவன் தேகத்தை வாள்கொண்டு வெட்டினும் அவன் உணர்வதில்லை. ஆகா, என்ன ஆச்சரியம்!

இந்தியர் ஒவ்வொன்றையும் அனுபவத்தில் கண்டறிந்தவர்கள் ; அநுபவத்தில் கண்டறிந்தாலே அவர்கள் மனம் நிம்மதியடையும். அவர்களுடைய மதம் மகரிஷிகளால் அநுபவத்தில் கண்டறிந்து எழுதப்பெற்றது. அவர்கள் தங்கள் உயிரைக் கைவிட நேரிடினும் மதத்தைக் கைவிடத் துணியாத மதப்பற்றுடையவர்கள். அவர்கள் கடவுளைப் பல உருவங்களாக அமைத்து வணங்கினும் அவைகள் அவர்களுக்கு மோக்ஷமார்க்கத்தை யடையக்கூடிய ஓர் சாதனமாகுமேயன்றி உண்மையான கடவுளாக மாறிவிடாது.''

நேயர்களே! முன்காலத்தில் இத்தனை உன்னத தசையிலிருந்த இந்தியர் இப்போது மதிப்பற்றும், மூடத்தனத்தில் வீழ்ந்தும் கிடக்கிறார்களென்று கேள்விப்படும் எந்தப் பிறநாட்டான்தான் கேட்டவுடன் ஆச்சரியப்பட்டு அவர்கள் மாட்டுப் பரிதாபங்கொள்ளமாட்டான்? அன்னியர் அவர்கள் செல்வத்தைக் களவாடிச் சென்றனர். அவர்கள் உண்ணும் உணவுக்கும் உடுத்தும் உடைக்கும் அன்னியநாட்டை எதிர்பார்க்கின்றனர். அவர்கள் தங்கள் உயிரினும் பெரிதாகப் போற்றிவந்த மதத்தையும் விற்கத் துணிந்துவிட்டனர். அவர்களை இப்போது ஓர் பேய்பிடித்துக்கொண்டு ஆட்டித் தூக்கிறது. ஆனால் அவர்கள் தங்கள் குறைகளை நிவர்த்திசெய்துகொள்ள முடியுமா? தற்காலத்தில் அத்தேசத்தில் விளையும் பொருள்கள் அத்தேசத்தினருக்குப் போதாதா? அவர்கள் முன்னிருந்த உன்னத தசைக்கு மறுபடியும் திரும்பிவரமுடியுமா? குறைவற்ற ஒரு தேசம்! தன் பிரஜைகளுக்கு வேண்டுவனவற்றைக் குறைவின்றியளிக்கும் ஒரு தேசம்! அதனால் கொடுக்கப்படுவனவற்றைச் சந்தோஷத்துடன் ஏற்று உண்டு களித்து அதற்காகப் பரிந்து ஒரு துளி இரத்தமேனும் சிந்த விட மனந் துணியாத புண்ணிய பிரஜைகள்தான் அங்கு வசிக்கின்றனர். இதுதான் இந்தியரின் தைரியம்போலும்!

இப்போது இந்தியாவில் நூற்றுக்கு ஐந்துபேரேனும் தங்கள் தாய்ப் பாஷையில் குற்றமறப் பேசவும், எழுதவும் படிக்கவும் தெரியாதிருப்பதைக் காண எனக்குப் பெரும் ஆச்சரியத்தை விளைவிக்கிறது. ஒரு தேசத்தார் தங்கள் தாய்ப்பாஷையையே சரிவரக் கற்றுணராது அலக்ஷியஞ் செய்யின் அவர்கள் மூடத்தனத்தை என்னென்றுரைப்பது. இதுதான் அவர்கள் அடையவேண்டிய பூரண முன்னேற்றம்போலும்!''

சி. பா. வைத்தியநாதன், பாகூர்.

குறிப்பு :—நமது நண்பர் மேலே குறிப்பிட்ட ஸோன்ரோட் (Sonnerat) என்பவரால் வெளியிடப்பட்ட புத்தகங்களின் ஏடுகளை அவரிடமிருந்து வரவழைத்துப் பார்வையிட்ட பின்பே யிதை வெளியிடுகிறோம். ஒரு ஐரோப்பியர் தம் மனப்பூர்வமாகக் கண்டறிந்தாலன்றி அவ்வாறு வரைந்திருக்கமாட்டார். இதனால் பூர்வீகத்தில் நம் தாய்நாடு எத்தகைய நிலைமையிலிருந்ததென்கிற உண்மை நன்கு விளங்குகிறது. அந்த

நிலைமையோடு நம் தற்கால நிலைமையை யொப்பிட்டுப்பார்த்தால், நாம் உண்மையான தேசாபிமானிகளாயின் நமது மனம் துடிதுடிக்க நாணமும் துக்கமும் நம்மை வாட்டாவோ. நாம் வீண் பேதங்களை நீக்கிவிட்டு மன ஒற்றுமையோடு நமது குறைகளையும் நீக்கிக்கொண்டு, முன்னேற்றமடைய அன்னியர் உதவியை யெதிர்பார்க்கும் மடமையை விட்டு, நாமே ஊக்கத்தோடு முயன்று நாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தாலன்றி நாம் தேசாபிமானிகள் என்ற பெயருக்கே உரியராகோம். வீணே "என் பாட்டன் வீட்டில் குதிர் குதிராய் நெல் கொட்டிவைத்திருந்ததாம்" என்று கூறிக்கொண்டு இப்போது கஞ்சிக்குக் காற்றுய்ப் பறப்பதில் பயனில்லை. முன்னோர் நிலைமையை நாம் அடைய முயல்வதே புருஷலட்சணமாகும்.

பத்திரிகாசிரியர்.

---

## ஓர் வேண்டுகோள்.

எனது அன்புள்ள "ஆனந்தபோதினி" சந்தா நேயர்களுக்கு 3353, சந்தாதாரனுகிய நான் எழுதிக்கொள்ளுவது:—

இப்பவும், தத்காலம் உலவிவரும் தமிழ்மாதப் பத்திரிகைகளுக்கெல்லாம் முதலாவதாக—அதிகமான சந்தாதாரர்களை யுடைத்தானதாக—குறைந்த சந்தாவும், உயர்ந்த விஷயங்களுமுடைத்தானதாக—உள்ளது நமது ஆனந்தனே யென்று சொல்லவேண்டுவதின்றும்.

ஆனந்தன் மாதந்தவிராமல் வந்து நமக்கு அளிக்கும் ஆனந்தத்திற்கும் இன்பத்திற்கும் ஓர் அளவில்லை யென்பது யாவரும் அறிந்ததே. அவனால் நாம் அடையும் ஆனந்தத்திற்கும் அவன் நம்பேரில் வைத்திருக்கும் அபிமானத்திற்கும் பதிலாக நாம் கொடுப்பது மிகவுங் குறைந்ததான ஒரு ரூபாயே.—ஒரு நாள் ஒன்றிற்கு ½ தம்பிடியே—இவ்வளவு குறைவான ஒரு நாளைய மூக்குத்தூளுக்கும் போதாத-½ தம்பிடியைக் கொடுப்பதற்கே அநேகருக்குக் கஷ்டமாகவிருக்கின்றதென்றால் நம் தமிழ்மக்கள் பத்திரிகைகளின்பால் வைத்திருக்கும் அபிமானம்—ஆதரணை—எத்துணையதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

ஒவ்வொரு தேசத்தில் நம் ஆனந்தனைப்போன்ற தேசபாஷைப் பத்திரிகைகளுக்கு இலக்ஷக்கணக்கிலும், பல்லாயிரக் கணக்கிலும் சந்தாதாரர்கள் இருப்பதாகவும் இம்மாதிரிப் பத்திரிகைகள் ஒவ்வொரு தேசத்திலும் ஆயிரக்கணக்கில் வெளிவருகின்றதாகவும் பத்திரிகை வாயிலாகத் தெரிகின்றது.

ஜப்பான் முன்னேற்ற மடைந்ததற்குக் காரணம் பத்திரிகாபிமானமும் ஒன்றெனத் தெரிகின்றது.

நம் தேசத்திலோ; தாய்பாஷை யென்றாலே வேப்பங்காயும் எட்டிக்

கொட்டையும் தோற்றுவிடும். என்னே நாகரீகமென்னும் அநாகரீகத்தின் கோலம்.

சிலர்—இங்கிலீஷ் என்றால், கருப்பா? சிவப்பா? வென்று கேட்கும் சிலர்கூட—ஆங்கிலப்பத்திரிகை கையிலிராவிட்டால் அநாகரீகம் பிடித்துக்கொண்டுவிடுமென அஞ்சி — நடுங்கி — பழையதோ — புதியதோ — ஏதோ—ஒரு ஆங்கிலப்பத்திரிகையைக் கையில் வைத்துக்கொண்டிருப்பதே நாகரீகத்தின் முதற்படி யென்று நினைத்து, ஆதி நாளாக ஆதரித்து வந்த தமது தாய்பாஷையை அலக்ஷியம் செய்து தள்ளிவிடுகின்றார்கள்.

மற்றும் சிலர், தமிழ் பேப்பரில் சுகமில்லை—இண்டரெஸ்டு கிடையாது—அது ஒழுங்காக நடப்பதில்லை. சில, மாதப்பத்திரிகைகளென்று பெயரை வைத்துக்கொண்டு இரண்டு மூன்று மாதம் கழித்து ஒருதரம் வருகின்றன. ஏதோ ஒன்றிரண்டு காலந்தவிராமல் வந்தாலும் அவ்வளவாக சுவாரஸியம் கொடுப்பதில்லை என்கின்றார்கள். ஒருவன் மிகுந்த பசியையுடையவனாக விருக்கின்றான். அவனை வேலைக்கு வைத்துக்கொள்ளுகின்றோம். அவனுக்கு அரைவேளைக் கஞ்சிக்கும் போதாத சம்பளத்தைக் கொடுக்கின்றோம். அவன் சரியாக வேலை செய்யவில்லை யென்றால் அது யாரைப் பொறுத்தது? அதைப்போல காகிதம் மை அச்சுக்கூலிக்கே போதாத சந்தாவை அளித்துவிட்டு, சரியாக நடக்கவில்லை யென்றால் அது யாரைச் சார்ந்தது? குழந்தை பிறந்தவுடன் பேசிவிடுகின்றதா? அது பெரிதாவதற்குள் எத்தனை இடையூறுகள் சம்பவிக்கின்றன? பிறந்தவுடன் பிரசங்கம் செய்யவில்லை யென்றால் எப்படி முடியும்?

சிலர் ஏன் குறைந்த சந்தாவை ஏற்படுத்தவேண்டும் என்கிறார்கள். இக்குறைந்த சந்தாவையே கொடுத்து ஆதரிக்காதவர்கள் அதிகச் சந்தா வென்றால் ஆதரிப்பார்களா?

ஒருநாள் கையில் ஆனந்தனுடன் செல்லும்பொழுது எனது நண்பர் ஒருவர் எதிரிட்டார். அவர் எனது கையிலுள்ள ஆனந்தனைப் பார்த்துவிட்டு—அதுவென்ன நாவலா வென்றார். அதற்கு நான் "நாவலில்லை "ஆனந்தபோதினி", நீங்களும் ஒரு சந்தாதாரராகச் சேருங்கள். மிகவும் உத்தமமான விஷயங்கள் இதில் வெளிவருகின்றன. சந்தாவும் மிகச் சொற்பந்தான்; ஒரு வருஷத்திற்கு ஒரு ரூபாய்தான். ஒரு நாளைக்கு அநாவசியச் செலவுகள் எத்தனையோ நடக்கின்றன. இதுவொரு பிரமாதத் தொகையல்ல. "பலதுளி பெருவெள்ளம்" என்பதுபோல நாம் கொடுப்பது சொல்பமாக விருந்தாலும், பலபேர் சேர்ந்துகொண்டால் அதுவே பெருத்த தொகையாகிவிடும்" என்றேன்.

அதற்கவர் "ஐயா உமக்கு வேலையில்லைபோலும்? அந்த ஒரு ரூபாய் இருந்தால் இரண்டு நாளைக்கு டிராமா, பயாஸ்கோப் பார்க்க உதவும். அதை விட்டுவிட்டு பத்திரிகையாம், பேப்பராம். பத்திரிகைக்காரன் வேறு வேலை யில்லாமல் வயிறு வளர்க்கப் பத்திரிகை போடுகின்றான். சாமா

சோமாவென்று எதையாவது இரண்டுவரியெழுதிவிட்டுப் பணத்தை அடித்துக்கொண்டுபோகின்றான். அப்படியாவது என்ன இங்கிலீஷா? ஒரு எழவுமில்லே. கேவலம் தமிழ். இக்காலத்தில் தமிழை யார் அய்யா சட்டை பண்ணுகின்றார்கள்? போய்யாபோம்'' என்றார்.

சகோதர சகோதரிகளே! இத்தகை அறிவிலிகளை யீன்ற அன்னையாம் தமிழுக்கு யாது குறைவிருக்கப்போகின்றது? பெற்ற தாய்க்குப் பிண்டம் போடாமல் அவளைப் பரதவிக்கவிட்டுப் பார்த்திருக்கும் பேதைகள் மலிந்திருப்பதை கண்கூடாகப் பார்க்கின்றோம். அப்படியிருக்க இது வொரு அதிசயமல்ல.

"பரோபகாரம் இதம் சரீரம்"

பிறருக்கு உபகாரம் செய்யும் பொருட்டே இச்சரீரத்தை அளித்துள்ளார் ஈசன் என்று கூறியுள்ளார் பெரியோர். பிறருக்கு உபகாரம் செய்வது உத்தமம். அப்படிப் பிறருக்கு உபகாரம் செய்யாவிட்டாலும்—செய்ய முடியாவிட்டாலும்—அபகாரம் செய்யாதிருத்தலே உத்தமோத்தமம் என்றார் ஒருவர். சிலர் பத்திரிகையை வி-பி-யில் அனுப்பச்சொல்லிவிட்டு வந்ததும் வாங்க மறுக்கின்றனர். இது என்ன இழிவானகாரியம். இவர் தம்மால் திரவிய சகாயம் செய்ய முடியாவிட்டாலும் வாக்குச் சகாயமாவது செய்யலாம்.-அதாவது விஷயதானம், பிறரைச் சந்தாதாரர்களாகச் சேர்த்தல்;- அல்லது சும்மாவாவது இருக்கலாமல்லவோ? வீணாக நஷ்டமடையச் செய்வதில் யாது பயனோ? சிலர் பத்திரிகை படிப்பதினால் பயன் யாது? என்கின்றனர்.

ஒவ்வொருநாடும்—ஒவ்வொரு தேசமும்—முன்னடைந்ததற்குக் காரணம்? பத்திரிகாபிவிருத்தியும் ஒரு காரணம் என்பது அறிவாளிகள் அனைவரும் அறிந்ததே.

ஆகையால் ஆனந்தனின் சந்தாதாரர்களாகிய நாம் அனைவரும் நம் நம்மால் இயன்ற உதவியைச் செய்து ஆனந்தனது அபிவிருத்தியில் அக்கரைகொண்டு இவனை ஆதரித்து மேலும் மேலும் பரவச்செய்யவேண்டும். பக்கத்திலும் பெரிதாக்கவேண்டும். அவை நம்முடைய முயற்சியாலாகவேண்டியனவே. நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு புதுச் சந்தாதாரர்களைச் சேர்த்து அனுப்பினால் அதுவே போதும். அது நமக்குக் கஷ்டமாகவாவது நஷ்டமாகவாவது இராது. அதனால் ஆனந்தனும் ஆனந்தத்தையடைவான். அவனால் நாம் ஆனந்தத்தை யனுபவிக்கும்பொழுது அவன் வருத்தமுறுவது சரியாமோ? அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகன் ஆனந்தன்மீது அருள்புரிந்து இவனை ஆதரிப்பாராக. அன்புள்ள நேயர்களே! சிறியேன் எழுதியதில் அநேகம் குற்றம் குறைகள் இருக்கலாம். குற்றத்தை விடுத்துக் குணத்தைக் கைக்கொள்ளவேண்டுமாகப் பிரார்த்திக்கின்றேன்.

மார்த்தை M. S. கிருஷ்ணய்யர்.

## நம் நாட்டுப் போலீஸார்.

நமது நாட்டிலுள்ள போலீஸார் ஏன் ஜனங்களுக்குப் பிரியமில்லாதவர்களாக விருக்கிறார்கள் என்பதைப்பற்றி பீகார் ஒரிஸா மாகாணங்களின் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகிய ஸ்வெயின் (M. W. Swain) என்பவர் ஹஸாரிபாக் என்ற ஸ்தலத்திலுள்ள போலீஸாரைப் பயிற்சி செய்யும் பாடசாலையில் ஓர் அரிய உபந்நியாசம் செய்தார். ஒவ்வொரு போலீஸ்காரனும் அதன் நகல் ஒன்றை வாங்கிக்கொண்டு அதை வாசித் துணரவேண்டும் என்று கட்டளையிடப்பட்டது. அவர் கூறியவை நமது மாகாணப் போலீஸ் சகோதரர்களுக்குப் பெரிதும் பயனளிக்கும் எனக் கருதி (மாடர்ன் ரிவியூவில் வெளிவந்த) அவற்றில் முக்கியமானவற்றை ஈண்டு பிரசுரம் செய்கிறோம். இவை ஒவ்வொரு போலீஸாரும் அவசியம் வாசித்து மனதில் வைக்கத்தக்கவை :—

“ போலீஸார் ஜனங்களுக்கு அனாவசியமாய்த் தொந்தரை கொடுக்கும் வழிகள் அனேகமிருக்கின்றனவென்று கூற விசனிக்கிறேன். அவர்கள்மேல் வரும் பிராதுகளுக்கு முக்கியமான காரணங்கள், (அகங்காரம் கோபம் முதலிய) துர்க்குணம், வணக்கமின்மை, மரியாதையின்மை, அனாவசியமான கடுமை, தங்கள் கடமைகளைப் பிறர் மனம் புண்படாத விதமாய்ச் செய்யாமை முதலியவைகளாம்.

“ கடந்த காலத்தில் தங்கள் அதிகாரத்தைத் துர் வினியோகம் செய்வது ஒரு விஷயத்தில் மிகச் சாதாரணமாக விருந்தது. எந்த விஷயத்திலெனில் நியாயமல்லாத வீடு சோதனைகள் செய்வதில். ஆனால் அது இப்போது மிகக் குறைந்துவிட்டதெனச் சந்தோஷமடைகிறேன். தங்கள் அதிகாரத்தைத் துர் வினியோகம் செய்வது இன்னொரு வழியிலும் நடக்கிறது. அதாவது அனாவசியமாகக் கைவிலங்கிடுதல்.

இந்திய போலீஸ்காரன் அடிக்கடி கூச்சலிடுவதையும், கைகளை வீசுறுவதையும், தடியை விசிறுவதையும், ஜனங்களைத் தள்ளுவதையும், முரட்டுத்தனமாய்க் கடுமொழிகளாலும் சில சமயங்களில் வசைச் சொற்களாலும் ஜனங்களிடம் சம்பாஷிப்பதையும் பார்த்திருக்கிறீர்கள். இங்கிலாந்திலுள்ள போலீஸ்காரன் இவற்றில் ஒன்றையும் செய்கிறதில்லை. அவன் “ தயவுசெய்து அப்புறம் செல்லுங்கள்” என்று கூறுவான். அவன் உறுதியானமாதிரியாய்க் கூறுவான்; அதனால் நாம் அப்படியே செய்வதுதான் மரியாதை யென்று நமக்கே புலப்படுகிறது. ஆனால் அவனென்னமோ அந்த “ தயவுசெய்து ” என்ற வார்த்தையைக் கூற மறக்கவேமாட்டான்.”

நமது நாட்டுப் போலீஸாருக்கு அத்தகைய பயிற்சி யளிக்கப்படவேயில்லை. முரட்டுத்தன்மை, போக்கிரித்தனம், இரக்கமற்றதன்மை இத்தகைய குணங்களை யுடையவர்கள்தான் போலீஸ் இலாகாவிற்குத் தகுதியானவர்கள் என்பதே நம்மவர் அபிப்பிராயம். பொய்சொல்லத் துணி

யாதவன் போலீஸ் இலாகாவிற்கு உதவமாட்டான் என்கிறார்கள். இவர்கள் இத்தகைய அபிப்பிராயங் கொண்டிருப்பதால் இத்தகைய குணங்கள் இல்லாதவர்கள் கூட அந்த வேலைக்குச் சென்றதே அக்குணங்களை வரவழைத்துக் கொள்கிறார்கள்.

ஜனங்கள் சௌகரியங்களைப் பாதுகாக்கவும், ஆபத்தில் உதவி செய்யவும், குற்றவாளியைக் கண்டுபிடிக்கவுமே நாம் அமர்த்தப்பட்டிருக்கிறோம். ஜனங்களுடைய பிரியத்திற்கு நாம் பாத்திரவானாக விருக்கவேண்டும் என்கிற எண்ணமே இவர்கள் உணர்ச்சியிலில்லை. "நாம் போலீஸ்காரனானதால் எவரும் நமக்குப் பயப்படவேண்டும்; எவரையும் பிடித்துக் கொண்டுபோய்க் கொட்டடியிலடைக்க நமக்கு அதிகாரமிருக்கிறது" என்ற இதுவே இவர்கள் முதல் எண்ணமாகிறது. அதனால் எடுத்ததே அதிகாரத் தொனியோடு பேச ஆரம்பித்து விடுகிறார்கள்.

செல்வம் செல்வாக்கு உடையவர்களாயின் அவர்களிடம் தாட்சண்யம் காட்டுவார்கள். ஆனால் எளியவர்கள், பட்டிக்காட்டார்கள் இவர்களையோ கடுமையாக நடத்தி அதிகமாக மிரட்டி விடுகிறார்கள். தாக்ஷண்யமும் இரக்கமும் காட்டினால் நமது காரியம் நடக்காதாகையால் கடின சித்தமும் குரூர நடக்கையுமே வேண்டும் என்று தாங்களே பாடம் படித்துக்கொள்கிறார்கள்.

இதனால் ஜனங்களுக்குப் போலீஸார் என்றால் பீதியாயிருக்கிறது. யாரிடம் பீதியுண்டாகிறதோ அவர்களிடம் அடுத்தபடியாய் வெறுப்புண்டாவது இயற்கை. அனேகர் உதவி வேண்டிக்கூடப் போலீஸாரிடம் செல்ல அஞ்சி, "அவர்களிடம் சிக்கிக்கொண்டு அவர்களால் அலக்கழிக்கப்படுவதைவிடப் போன பொருளோடு ஒழிந்துபோகட்டும்" என்கிறார்கள். "அவன் எவ்வளவு சினேகனாக இருந்தாலும் சரி, நெருங்கிய பந்துவாக இருந்தாலும் சரி, போலீஸிலிருப்பவனைமட்டும் எள்ளளவும் நம்பலாகாது" என்ற அபிப்பிராயம் ஜனங்களுக்குள் உண்டாயிருப்பது வெளிப்படை.

சிறுவர்கள் தங்களுக்கு அன்னியர் யாரேனும் ஒரு தீங்கிழைத்தால், எவ்வளவு ஆவலோடும், நமக்குத் தீங்கு செய்தவர்களுக்குக் கட்டாயம் தண்டனை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடும் தங்கள் பெற்றோரிடம் கூற வீட்டிற்கு ஓடுகிறார்கள்! போலீஸ் சாவடி ஜனங்களுக்கு அத்தகைய இடமாகத் தோன்றவேண்டும். போலீஸ் சகோதரர்கள் அவ்வாறு நடந்துகொள்ளவேண்டும்.

இங்கிலாந்திற்குச் சென்று வந்தவர்களும் சில ஆங்கிலர்களும் கூறியவற்றிலிருந்து அங்குள்ள போலீஸார் ஜனங்களுடைய அன்பிற்கும், நம்பிக்கைக்கும் உரியவர்களாக நடந்துகொள்கிறார்களென்று நன்றாய்த் தெரிகிறது. கள்ளனாக விருந்தாலும் அவனுக்குக்கூட அனாவசியமாக மனத்தாங்கலையேனும் அவமானத்தையேனும் உண்டாக்காவிதமாய்த் தங்

கள் கடமைகளைச் செய்கிறார்கள். ஒரு நாகரீகக் கள்ளன் கள்ளக் கை யொப்பமிட்டு ஒரு செல்வவந்தர் பெயரால் ஆயிரம் பவுனுக்கு உண்டி பிறப்பித்து பாங்கியில் பணம் வாங்கிவிட்டான். சற்றுநேரத்திற்குள் உண்மை வெளிப்பட்டு அவனைக் கைது செய்வதற்காக இரண்டு போலீஸ் காரர்கள் அவன் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்றார்கள். அச்சம யம் ஹோட்டல் எதிரில் ஒரு குதிரைக் கோச்வண்டி நிற்பதைக் கண்டு சந்தேகங்கொண்டு வண்டிக்காரனை விசாரித்தபோது அக்கள்ளனே எங்கோ செல்ல வண்டி வரவழைத்திருக்கிறான் என்று தெரிந்தது. அதன்மேல் போலீஸார் வண்டிக்காரனை நோக்கி ஆள் வந்து வண்டியி லேறியபின் வண்டி புறப்படும்போது நாங்களும் மறைவாய் வண்டியின் பின்பக்கம் உட்கார்ந்துகொள்வோம். அதை யறிந்ததே நீ வண்டியில் யார் ஏறி யிருந்தாலும் வண்டியை நேராகப் போலீஸ் அதிகாரியின் காரி யாலயத்திற்குக் கொண்டுபோ" என்றார்கள்.

அந்நகர வண்டிக்காரருக்கு அந்த அனுபவம் தெரியுமாதலால் அவன் அப்படியே செய்தான். இன்னவிடத்திற்குச் செல்லவேண்டுமென்று கள் ளன் சாரதிக்கு முன்னமே கூறியிருப்பதால் மறுபடி யொன்றும் கூற வில்லை. ஆனால் வண்டி தான் கட்டளையிட்ட விடத்திற்குச் செல்லும் மார்க்கத்தை விட்டு வேறு வழி திரும்பியபோது அவன் சாரதியை விளி த்து "இவ்வழியல்ல இடதுபக்க வழி செல்லவேண்டும்-திருப்பு திருப்பு-நிறுத்து நிறுத்து..." என்று கூவினான்.

சாரதியோ சற்றுநேரம் காது கேட்காதவன்போல் வண்டியை யதி வேகமாக வோட்டிக்கொண்டிருந்து கடைசியில் "இந்த வழியும் அங் கேயே செல்கிறது" என்றான். சற்றுநேரத்திற்குள் வண்டி போலீஸ் அதிகாரி யிருக்குமிடம் போய்ச் சேர்ந்தது—கள்ளன் கைது செய்யப்பட் டான். அவன் இருந்த ஹோட்டல் கௌரவமான ஹோட்டலானதால் அதற்கு அகௌரவமுண்டாக்கலாகாதென்றே போலீஸ்காரர் அப்படிச் செய்தார்கள்.

ஒரு மனிதனைப் பிடிக்க வாரன்ட் கொண்டுபோகும்போது அவன் வேறு இரண்டு மூன்று சிநேகர் கூட்டத்தில் அல்லது விருந்து நடக்கு மிடத்தில் இருந்தால், அவனை இரகசியமாகத் தனியாயழைத்து வாரண் டைக் காட்டி யப்படியே கொண்டுபோய் விடுவார்கள். அங்கிருப்பவர் களுக்கு "அவர் ஒரு அவசர வேலையாய்த் திடீலென்று செல்லவேண்டி நேர்ந்தது. நீங்கள் இன்னொருசமயம் அவரைச் சந்திக்கலாம்" என்று கூறிவிடுவார்கள். நடுக் கடைவீதியில் ஒருவனைக் கைது செய்வதாயினும் அவ்வாறே வேறெவரு மறியாவண்ணம் அடக்கமாகவே பிடித்துச் செல் வார்கள்.

ஒரு சமயம் ஒரு வழிபறிக் கொள்ளைக்காரனைப் போலீஸார் தேடிக் கொண்டிருந்தார்கள். ஒருநாள் காலை பத்துமணிச் சுமாருக்கு அவன் ஒரு

வண்டியிலேறிவந்து ஒரு பிரபல நகைக்கடையின் முன் வண்டியை விட்டிறங்கிக் கடைக்குள் சென்றான். அச்சமயம் சாதாரண உடையணிந்த இரண்டு போலீஸ்காரர் அவனைக் கண்டார்கள். அக்கள்ளன் அச்சமயம் ஒரு வைத்தியன்போல் மாறு வேடமணிந்திருந்தான். ஆயினும் போலீஸாரில் ஒருவன் அவனை நன்றாயறிந்தவனாதலின் தெரிந்துகொண்டான். கள்ளன் உள்ளே சென்றதும் போலீஸார் சாரதிக்குச் சங்கதியைக் கூறிவிட்டு வீதியிலுள்ள ஜனக்கூட்டத்தில் மறைந்திருந்து கள்ளன்வந்து வண்டியிலேறியதும் போலீஸார் இருவரும் பின்னாலேயே ஏறி அவன் இருபுறங்களிலும் உட்கார்ந்தார்கள்.

கள்ளன் திடுக்கிட்டுக் கோபத்தோடு "யார் நீங்கள்? நான் அமர்த்தியிருக்கும்..." என்பதற்குள் போலீஸ்காரரில் ஒருவன் "எல்லாம் சரியே. நாங்கள் உன் கூடவே அதாவது நீ எங்கள்கூடவே வரவேண்டும். உன் விஷயத்தில் சந்தேகம் இருக்கிறது" என்றான். கள்ளன் "ஓ! நீங்கள் ஒரு பெரியமனிதரை யிப்படி அவமானம் செய்வதற்கு தக்க தண்டனை யடைவீர்கள்" என்றான். போலீஸ்காரன் "நாங்கள் தவறாக நடந்துகொண்டால் தக்கபடி மன்னிப்புக் கேட்டுக்கொள்ள எங்களுக்குத் தெரியும்" என்றான். கடைசியில் அதே போலீஸ்காரனே அம்மனிதன்தான் தாங்கள் தேடிக்கொண்டிருக்கும் கொள்ளைக்காரன் என்று அதிகாரியின் முன் அவன் மாறுவேடத்தைக் களைந்து அங்க அடையாளங்களைக் காட்டி ருசுப்படுத்தி அவனைக் கைதுசெய்தான்.

நம் நாட்டுப் போலீஸார் ஜனங்களின் அன்பிற்குப் பாத்திரவான்களாக நடந்துகொள்ளவேண்டுமென்ற ஆவலினாலேயே இதை நாம் வரைய நேர்ந்தது. நமது போலீஸ் சகோதரர்கள் மனம் வைத்தால் சுலபமாகவே ஜனங்களுக்குத் தங்களிடம் அன்பும் மரியாதையும் நம்பிக்கையும் உண்டாகும்படி செய்துகொள்ளலாம். இப்போது அப்படிப்பட்டவர்கள் போலீஸ் இலாகாவில் இல்லையென்று நாம் கூறவில்லை. அதற்கு மாறாகப் பிரத்தியக்ஷமாகச் சிலர் இருக்கிறார்கள் என்பதை யறிவோம். ஆனால் அவர்கள் ஒரு கூடை உமியில் ஒரு பிடி நெல் இருப்பதுபோலிருக்கிறார்கள். சாதாரண போலீஸ்காரரில் பெரும்பாலோர் அப்படி நடந்துகொண்டால்தான் அந்த இலாகா முழுமைக்கும் அத்தகைய சிறப்புண்டாகும். ஆகையால் போலீஸ் சகோதரர்களே! தயவுசெய்து இதைக் கவனமாய் மறுபடி வாசித்துப் புகழுடையும் மார்க்கத்தில் நடக்கும்படி உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

உங்கள் நண்பன்.

## குணம் பெரிதா? கும்பல் பெரிதா?

மற்ற குணங்கள் இல்லாமல் ஜனசங்கியை மாத்திரம் அதிகமாக இருந்தால் ஒரு தேசம் முன்னுக்கு வந்துவிடுமென்றும் அது குறைவாக இருந்தால் தலை யெடுக்காதென்றும் சொல்லமுடியாது. ஆசியா கண்டத்தில்

40 கோடி ஜனமுள்ள சீனு தேசம் குடி அரசாங்கம் அடைந்தும் இன்னம் பெரும்பாலும் பழய தாமஸ குணம் நீங்காமலே இருந்துகொண்டிருக்கிறது! ஆனுல் 5 கோடியுள்ள ஜப்பான் தீவு இப்பொழுது எவ்வளவு நாகரிகமும் கௌரவமும் அடைந்திருக்கிறது!! அம்மாதிரியே ஐரோப்பியாக் கண்டத்தில் 16 கோடியுள்ள ரஷியாதேசம் குடிகளுக்குள் ஒற்றுமையில்லாமல் தற்சமயம் எவ்வளவு கஷ்டங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறது! ஆனுல் 4½ கோடியுள்ள நம்முடைய பிரிடிவ்ஷ் தேசத்தார் இந்த உலகத்தில் இப்பொழுது எவ்வளவு சக்தியும் கீர்த்தியும் பெற்றிருக்கிருர்கள்!! சமீபத்தில் நடந்த உலக மகா யுத்தத்திலும், பெல்ஜியம், சர்வியா, போலெண்டு போன்ற சிறிய தேசங்களின் பராக்ரமமும், தீரமும், ஜர்மனி, ஆஸ்த்ரியா, போன்ற பெரிய இராஜ்யங்களும் பிச்சை வாங்கும்படி இருந்ததல்லவா? அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் நீக்ரோ ஜாதியார் 10-ல் ஒரு பங்கு இருந்தும், மற்றுமுள்ள 9 கோடி வெள்ளைக்காரர்கள் இடையூறுகள் செய்தும், அவர்கள் சென்ற 50 வருஷத்திற்குமுன் 100-க்கு 5 பேர்கள் தான் படிப்பாளிகளாக இருந்தும் சுயமுயற்சியால் இப்போது 100-க்கு 70 பேர்கள் படிப்பாளிகளாக இருக்கிருர்கள்! ஆனுல் அந்தோ! இந்தியர்களாகிய நாம் மேற்சொல்லிய சுயமுயற்சி இல்லாமையால் 150 வருஷ காலமாய் 100-க்கு 5 பேர்தான் படிப்பாளிகள் ஆன கணக்கிலேயே மக்கிக்கொண்டிருக்கிருேம். தென் ஆப்ரிக்காவில் நமது ஸாத்வீக காந்தி மஹாத்மா அவர்கள் சொல்ப தொகையான நாலு அல்லது ஐந்து ஆயிரங்களாகிய ஏழை ஸ்திரீ புருஷ ஜனங்களைக்கொண்டு அந்த கவர்ன்மெண்டில் எத்தகைய நற்காரியங்களைச் செய்துவிட்டார்! எத்தால் பிழைக்கலாம்? ஒத்தால் பிழைக்கலாம்! ஏனென்ருல் சக்தியும் யுக்தியும், ஒன்று சேர்ந்தால் என்ன வேலைதான் செய்யா. நம் நாட்டிலே மஹம்மதிய ஜனங்கள், ஐந்தில் ஒரு பங்குதானிருந்தாலும், அவர்களினுடைய ஒற்றுமையும், ஊக்கமும், தைரியமும், மதாபிமானமும், ஹிந்துக்களாகிய நமக்கில்லை. கிரிஸ்துவர்களும் அப்படியேதான். ஜனக்கணக்கு குறைவாக இருந்தாலும் மதாபிமானம் அதிகமாகத்தான் பாராட்டுகிருர்கள். பார்ஸி ஜனங்கள் மொத்தம் ஒரே இலக்ஷம்பேர்கள் இருந்தும் அவர்களினுடைய வியாபாரமும், பணமும், படிப்பும், ஜே. என். டாடா (தாதா வென்றும் சொல்லலாம்!) போன்றவர்களினுடைய பரோபகாரங்களும் மற்ற ஜாதியாருக்கில்லை. தாதாபாய், பவனகிரி, ஸக்லத்வாலா என்னும் மூன்று இந்தியர்களாகிய சீமை பார்லிமெண்டு மெம்பர்களும் பார்ஸிகாரர்களே! அம்மாதிரியே நம் தென் இந்தியாவிலும், நாட்டுக்கோட்டைச் செட்டிகளுடைய ஜனத்தொகை கொஞ்சமாக இருந்தாலும் அவர்களினுடைய தானமும், தர்மமும் எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே! திராவிடர்களில் "மலையாளிகள்," மற்ற மூன்று பாஷைகளாகிய, தெலுங்கு, தமிழ், கன்னடம் பேசும் ஒவ்வொரு ஜனசங்கியைக் காட்டிலும், அதிகக் குறைவாக இருந்தாலும், ஆதி சங்கராசசாரியார் முதல் ஸர் சங்கரன் நாயர் வரையில், அவர்களுடைய சாஹஸமும்,

ஆரதேசங்கள் போகக்கூடிய தைர்யமும் உற்சாகமும் மற்ற திராவிடா களுக்கு அவ்வளவு இல்லை. மேலும் சண்டை சச்சரவுகளிலும் அவர்கள் சலித்தவர்கள் அல்லவென்றும் சமீபத்தில் தெரிந்ததல்லவா!! கடைசியாக பிராம்மணர்கள் அதிக சுவல்ப ஜனக்கணக்காக இருந்தாலும் அவர்களுக்கு இருக்கும் படிப்பு மற்றவர்களுக்கில்லை. அந்த அந்தணர்களிலும் ஸ்மார்த்தர்கள் அதிகம். அதைவிட வைஷ்ணவர்கள் குறைவு. அதைக் காட்டிலும் மாத்வர்கள் அதிக கொஞ்சம்பேர்கள். ஆனால் மதாபிமானத்திலும், ஒற்றுமையிலும், மாத்வர்களுக்கிருக்கும் பற்று வைஷ்ணவர்களுக்கு அவ்வளவு இல்லை. அப்படியே வைஷ்ணவர்களின் சுயஜாதி அபிமானம், ஸ்மார்த்தர்களுக்கில்லை. அதாவது ஒருவிதத்தில் பார்க்க ஜனசங்கியை குறையக் குறைய ஒற்றுமையும் ஊக்கமும் உண்டாவதுடன் பெரிய சங்கியை உடைய ஜனங்களுக்கு ஏற்படும் வித்யாசங்களும், விபரீதங்களும் கூடுமானவரையில் இல்லாமல் இருக்கின்றன. ஆகையால் ஜனத்தொகை அதிகப்படுவதால் சக்தியோ அல்லது யோக்யதையோ, அந்தக்காரணத்தினாலேயே, அதிகப்படுமென்று எண்ணுவது தவறான அபிப்பிராயமென்று நமக்கு மேற்கூறிய அனேக ஜன உதாரணங்களால் கண்கூடாகத் தெரிகிறது! ஆகையால் இந்தியர்களாகிய நாம், பிராம்மண—அப்ராம்மண விவாதங்களும், திராவிட ஆதி திராவிட சண்டைகளும், ஹிந்து—மஹம்மதிய விரோதங்களும் ஒன்றையும் பாராட்டாமல் ஒற்றுமையோடு உழைப்போமாயின் நம்முடைய தாய்நாடு, சர்வேச்வரன் கிருபையால் கூடிய சீக்கிரத்தில், மேலான நிலை யடையும் என்பதில் ஐயமில்லை.

உ. துரைசாமி ஐயர், வாலாஜா நகர்.

---

## ஜீவவதை.

கடந்தவாரம் கோயமுத்தூர் முனிசிபாலிடியாரால் அங்குமிங்கும் அலைந்துதிரியும் நாய்களை வெயில்காலத்தில் அடித்துக் கொல்லும் விஷயமாக ஜில்லா கலெக்டரிடமிருந்து உத்தரவு பெற்றுக்கொள்வதற்காகத் தீர்மானம் செய்யப்பட்டது. ஆனால் தடியால் அடித்துக் கொல்லும் செய்கையானது அதிக பரிதாபமானதும், வெகு பயங்கரத்தை உண்டுபண்ணக் கூடியதுமாக விருப்பதால் அவ்விதமாக ஜனங்களின் கண் முன்பாக ஜீவவதை செய்வதைத் தவிர்த்து வேறு விதமாக மாமிசத்தில் தீவிரமான பாஷாணங் கலந்து அங்குமிங்கும் கழுத்தில் யாதொரு தோல்பட்டை இல்லாமல் திரிந்துகொண்டிருக்கும் நாய்களுக்குக் கொடுத்துக் கொல்லும்படியாகப் பிரேரேபணை செய்ததில் கொஞ்சமும் கவனியாமல் எப்பொழுதும்போல் தடியால் அடித்துக் கொல்லுகிற வழக்கத்தைக் கவுன்சிலில் ஏற்படுத்திவிட்டது வெகு குரூரமானதும் பரிதாபமானதுமான காரியமாக இருக்கிறது. உதகமண்டலம் மற்ற முனிசிபாலிடியில் மாமிசத்தில் தீவிரமான விஷங் கலந்து நாய்களுக்குக் கொடுத்து இவ்விதமான நாய்களின் கழுத்தில் கயிற்றால் சுருக்குப் போட்டுக் கட்டி அவற்றை ஒரு இடத்தில்

சேர்த்துவைத்துச் சொந்தக்காரர்கள் யாராவது வந்து கேட்டால் வரியை வசூல் செய்துகொண்டு அந் நாய்களைக் கொடுத்துவிடுவது வழக்கம். அப்படிச் சொந்தக்காரர்கள் வராவிட்டால் சில நாட்கள் கழிந்ததும் சுட்டுவிடுவது வழக்கம். ஆனால் இந்த முனிசிபாலிடியில் மாத்திரம் ஜனங்களின் கண் முன்பாகத் தடியாலடித்து வாயிலிருந்தும் தலையிலிருந்தும் இரத்தம் வரவரத் தெருக்களிலும், ரோட்டிலும் இழுத்துக்கொண்டு போகிற வழக்கத்தை விட்டுவிட வேண்டுமென்று கண்டித்துப் பேசியும் கவுன்சிலில் சற்றேனும் அங்கீகரித்துக்கொள்ளாமல் பழைய வழக்கம்போல் தடியால் அடித்துக் கொன்று வதை செய்வதைத் தீர்மானம் செய்துவிட்டது விந்தையினும் வெகு விந்தையே. இதுதான் ஜீவகாருண்யம்போலும். நாய்களென்றால் அவைகளுக்கு வருத்தம், வதை செய்வதால் உண்டாகாது போலும். இவ்விதக் கொடியதும் சகிக்கமுடியாததுமான செய்கையை இனிமேலாவது கோயமுத்தூர் முனிசிபாலிடியார் சீர்திருத்தம் செய்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. எருதின் வலி காக்கைக்குத் தெரியாதுபோலும்!!

ஆர். வீரையன்,
முனிசிபல் கவுன்சிலர், கோயமுத்தூர்.

குறிப்பு:—கோயமுத்தூர் நகர பரிபாலன சபையாரின் மேற்கண்ட நடவடிக்கை மிக்க விசனிக்கத்தக்கதே. நியாயமாய் ஆண்டவனால் படைக்கப்பட்ட இப்பூமியில் அவன் சிருட்டிகளாகிய சகல ஜீவராசிகளுக்கும் வசிக்க உரிமையுண்டு. இன்னொரு ஜந்துவால் நமக்குத் தீங்கு நேர்வதாயின் நாம் எட்ட விலகிவிடவேண்டியது. இதுவே ஆன்றோர் செய்கையாகும். அப்படிக்கின்றேல் அஜ்ஜீவனுக்கு எவ்வித தீங்கும் செய்யாமல் அதைக் கொண்டுபோய்த் தூரத்தில் விடவேண்டும். இப்போது நாய்களால் பெரிய கெடுதி நேர்வதால் அவற்றைக் கொன்றே தீரவேண்டுமென்றாலும் அவற்றிற்கு இம்சையுண்டாக்காமல் கொல்லலாகாதா? தடியாலடிப்பதால் அவ்வாயில்லாத—ஆனால் நன்றிமறவாமையில் மனிதனிலும் எவ்வளவோ மேம்பட்ட—ஜெந்து இரத்தம் சிந்தித் துடிதுடித்து மடிகிறது. அது மிக்க கோரமான மனந்துடிக்கும் காட்சியே. இச்சென்னையில்கூட நாடோடி நாய்களைப் பிடித்துப்போய் மூன்று நாட்கள் வைத்திருக்கிறார்கள். அதற்குள் சொந்தக்காரர்கள் சென்று நாய்வரி கட்டிவிட்டு நாயைப் பிடித்துவந்துவிடலாம். மூன்றுநாள் வரை யாரும் வராவிட்டால் பிறகு பாஷாணத்தால் தான் கொன்றுவிடுகிறார்கள். நாடெங்கும் ஜீவகாருண்யத்தைப்பற்றிப் பெருமுழக்கமாயிருக்கும் இக்காலத்தில் பெரும்பாலும் ஹிந்துக்களடங்கிய ஒரு நகரபரிபாலன சபையின் அங்கத்தினராயிருப்போர் ஜீவகாருண்யத்திற்கு மாறாக நடப்பது மிக்க விசனிக்கத்தக்கதே. பழைய வழக்கமெல்லாமே நல்லதல்ல—புது வழக்கமெல்லாமே கெட்டவையல்ல. அப்படியே எல்லாப் பழைய வழக்கங்களும் கெட்டவையல்ல எல்லாப் புது வழக்கங்களும் நல்லவையல்ல.

நமது நாட்டார் தற்காலத்தில் நம் முன்னோர்களின் வழக்கங்களில் நல்லவற்றைக் கைவிட்டுவிட்டு நவீன நாகரிக ஆசாரங்களில் நமக்குத் தீமையுண்டாக்கத்தக்கவைகளையே கைக்கொள்கிறார்கள். ஆண்டவனே இப்பெருந்தவறான வழியினின்றும் நம்மவரைத் திருப்பிக் காப்பாற்றி யருளவேண்டுமாயப் பிரார்த்திப்போமாக.

பத்திரிகாசிரியர்.

---

## துறவு—யோகம்.

(392-ம் பக்கத் தொடர்ச்சி.)

இந்தப் பிரமரந்திரமே மோட்சமார்க்கமென்று நூல்களாற் புகழ்ந்து கூறப்படுவது. இது முதுகந்தண்டை யூடுருவிக்கொண்டு கபாலத்தில் சென்று துவாதசாந்தத்துக்குமப்பால் நிற்பது. ஆண்டு அனந்தகோடி சூரியர்கள் ஏககாலத்தில் உதயமானாற்போலச் சுயம்புவான துரீய பரப்பிரமம் ஒளிவீசிப் பிரகாசித்துக்கொண்டிருக்கும். அதனோடு கலந்து நிற்பதே யோகத்தாலாம் பெரும்பயன். இந்த ஸ்தானமே இராப்பகலற்ற விடம், நினைப்பு மறப்பு மற்றவிடம், வரவு போக்கற்றவிடம், பிறப்பிறப்பற்ற விடம் என்று ஆன்றோராலும் நூல்களாலும் புகழ்ந்து கூறப்படுவது. இந்த மார்க்கத்தில் நோயணுகுவதில்லை. எமன் வருவதில்லை. ஆதலால் இங்கு மரணம் என்பதே யில்லை. இதனாலேதான் பூர்வகாலத்துப் பெரியோர்களிற் பலர் எத்தனையோ கோடிக் கற்பங்களைக் கண்டு நெடுங்காலம் ஜீவித்திருந்ததாக நூல்களிற் காண்கின்றோம். அந்தச் சரீரத்துக்கு மூப்பு இளமை யென்கிற பருவபேதங்கள் கிடையா. இதனாலே மார்க்கண்ட முனிவரைப் பார்த்த யுதிஷ்டிரர் இவர் பல கற்பங்களைக் கண்டு கழித்த முதியவராயிருந்தும் இருபத்தைந்து வயதுள்ள யௌவ்வன பருவமுடையராக விளங்குகிறாரென்று வியந்து கூறியதாகப் பாரதங் கூறுகின்றது.

இவ்வாறு குண்டலியென்னும் சக்தியோடு ஆன்மாவும் மேற்செல்லும் என்று நூல்கள் கூறுகின்றன.

"மூலமணி பூரகத்தோ டிலிங்க மார்பு
முதுகளம்விற் புருவாடு மொழிவ தாறு
ஞாலமுமென் புனலுமனற் பிழம்புங் காலும்
நாதமுறு பெருவெளியு மனமு மாக
மேலணுகிக் குளபதத்தைப் பின்னிட் டப்பால்
மென்கமலத் தாயிரந்தோட் டருண பீடத்
தாலவிடம் பருகியதன் மகிழ்ந ரோடு
மானந்த முறும்பொருளை யறிய லாமே."

குண்டலிசக்தி மூலாதாரத்தைவிட்டு ஆறாதாரங்களையும் மூன்று மண்டலங்களையுங் கடந்து, மனதோடு (ஆன்மாவோடு) சென்று துவாதசாந்தப் பெருவெளியில் விளங்கும் சதாசிவத்தோடு கலக்கும். அதைத் தரிசிப்

பதே முத்தியென்று கூறப்பட்டது. "இலிங்க" மென்றது சுவாதிஷ்டானம். மணி பூரகமிலிங்கமெனக் கூறினாரேனும் சுவாதிஷ்டானம் மணி பூரகமென மாற்றிப் பொருள்கொள்க; "குளபதம்" புருவ நடுவாகிய ஆக்கின, குளமென்பது நெற்றி. எப்பொழுது மான்மா மனதைப்பற்றிச் சலித்துக்கொண்டே நிற்குமாதலால் அபேதம்பற்றி ஆன்மாவை மனமென்றார்.

இதனால் முத்திபரியந்தம் ஆன்மாவும் மனமும் தனித்து நில்லா என்பது. இது காரணம்பற்றியே ஆன்மாவுக்கு "உள்ளம்" என்று ஒரு பெயர் வழங்குகிறது. முற்கூறியவாறு சதாசிவத்தோடு கலந்த சத்தியின் திருவடிக் கமலத்தில் அமிர்தமயமான தேனூறிப்பெருகும்.

"தாளிணைக் கமல மூறித் தருமமிழ் துடல மூழ்க
மீளவப் பதங்கள் யாவும் விட்டுமுற் பழைய மூலம்
வாளர வென்ன வாகம் வளைத்துயர் பணத்தி னோடு
நாளுமைக் கயற்கண் டுஞ்சு ஞானவா னந்த மின்னே."

அந்த அமிர்தத்தில் முழுகி உடலம் நனைந்து அமிர்தமயமாய்விடும். அதன்பின் சத்தியும் முறையே ஆறாதாரங்களையும் கடந்து கீழிறங்கி மூலாதார ஸ்தானத்தை யடைந்து முன்போல நித்திரைசெய்யும். இவ்வாறு சரீரமெல்லாம் அமிர்தமயமாய்விடுதலால் அந்த யோகியின் சரீரம் பஞ்ச பூதங்களாலும் மற்றெவற்றாலும் ஊறு அடைவதில்லை. அவர்கள் தங்கள் சரீரத்தை எந்தப் பூதமாகவாவது மாற்றிக்கொள்வார்கள். இது காரணம் பற்றியே *புசுண்டர் என்னும் யோகியை நோக்கி நீர் பிரளய காலங்களில் எவ்வாறு பிழைத்திருந்தீரென இந்திரன் கேட்டபோது, அவர் நான் அக்கினி பிரளயத்தில் அக்கினியாகவிருந்தேன். ஜலப்பிரளயத்தில் ஜலமாகவே யிருந்தேன். இதனால் நானழிவற்றிருக்கிறேன். வெறுப்புத் தோற்றியபோது இந்தச் சரீரத்தையே விட்டு சாயுஜ்யமாகிய ஐக்கியமுத்தியை அடைந்துவிடுவேனென்றார். அதுகேட்டு இந்திரன் மகிழ்ந்து நீர் எந்தக்காலத்தில் எவ்வகையாகச் சரீரத்தை விடக் கருதுகின்றீரோ அவ்வாறே யாகும்படி நானுமக்கு வரந்தருகிறேனென்று கூறி வரங்கொடுத்துவிட்டுத் தன்னிருப்பிடஞ் சார்ந்தான்.

இவ்வாறே பிருகுமஹாரிஷியின் புத்திரராகிய சியவனமுனிவர் ஒரு நதியில் முழுகித் தவஞ்செய்துகொண்டிருந்தார். பெருவெள்ளம் வந்த போது அவரையும் அடித்துக்கொண்டுபோயிற்று. அவ்விடத்தில் வலைகாரர் வலைவீசி மீன் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அந்த வலையிற் சிக்கிய பல மீன்களோடு சியவனரும் அகப்பட்டுக்கொண்டார். வலைஞர் வலையை யிழுத்து வெளியிற் போட்டபோது சியவனரைக் கண்டு திகைத்து நின்றார்கள். சற்றுநேரத்தில் முனிவர் கண் விழித்துப்பார்த்தார். வலைஞர் அவரை வணங்கி இஷ்டமான இடத்துக்குச் செல்லக்கடவீரென்று பிரார்த்திக்க முனிவர் சம்மதிக்காமல் தம்மையும் மீனோடுகூடச் சேர்த்து விற்கச்சொன்னார். அப்போது அஸ்தினாபுரியையாண்ட அரசன் அவருக்காக அளவற்ற பொன் கொடுத்தும் அது தனக்கு விலையாகாதென்று கூறி மறுத்தார். பிறகு அரசன் தன்னுடைய குருவின் உத்தரவினால் பத்துக் காராம்பசுவைக் கொடுத்தான். முனிவர் மகிழ்ந்து வலைஞரை நோக்கி நீங்கள் பாகம் செய்துகொள்ளுங்களென்று கூறிப் போய்விட்டார். ஒருகாலத்தில் துவாதசவருஷ (12 வருஷங்கள்) பஞ்சமுண்

* புசுண்டர் சரித்திரம் வாசிட்டத்தில் உளது.

டாயிற்று. அப்போது நாட்டுக்குடிகள் வனத்துக்குப்போய்க் கிழங்கு காய் கீரைகளைத் தின்று ஜீவித்தார்கள். அதுவும் அகப்படாமற் போனபோது எல்லாரும் ஒன்றுகூடி அங்கிருந்த அசுவத்த மஹரிஷியின் சமாதியின் அண்டையிற்போய் முறையிட்டழுதார்கள். அப்போது அச்சமாதியிலடங்கியிருந்த முனிவர் ஒரு சித்தராய்த் தோன்றிச் சமாதியினின்றும் வெளிவந்து அவர்கள் குறைகளைக் கேட்டு வானத்தை அண்ணாந்து பார்த்தார். உடனே பெருமழை பொழிந்து எரிந்துபோன செடி கொடிகளெல்லாம் முளைத்துத் தழைத்துச் செழித்துப் பலன் கொடுத்தன. இவ்வாறு அடங்கியிருந்த முனிவர் சித்தர்களெல்லாரும் லோகோபகாரார்த்தமாக மீண்டும் வருதல் கூடும். அவர்கள் உலகங் கடந்தவர்கள். மரணமென்பது அவர்களுக்கில்லை. ஆதலால் அவர்கள் சரீரத்தைச் சமாதியில் சேமித்து வைப்பதே தகுதி. பூர்வகாலத்தில் (கிருதயுகாதியில்) எல்லாரும் உலக விவகாரமற்று யோகிகளாகவே யிருந்தமையால் அவர்கள் எல்லாரையும் சமாதியிலேயே வைத்தார்கள். ஜனங்கள் சிறிது பாப சம்பந்தப்பட்டுப் பிரிந்துபோனபோது அவர்களிற் சிலர் அதனையே கையாண்டு வந்தார்கள். அதுதான் இக்காலத்தில் ஒரு சாரார் பிரேதங்களைச் சமாதியிலேயே வைத்து வருகின்றார்கள். விரிக்கிற் பெருகும். (தொடரும்.)

**சிவானந்தசாகர யோகீஸ்வரர்.**

---

## நுண்ணிய கருமமு மெண்ணித் துணி.

இஃது நம் ஞான மாதாவாகிய ஔவைப் பிராட்டியாரின் அமுதவாக்கு. இதன் பொருள் நம் நேயர்கட்குத் தெரிந்த விஷயமே. பெரும்பாலோர் இவ் வமுதவாக்கினை நினைப்பதுமில்லை, கவனிப்பதுமில்லை. எத்தகைய காரியமாயினும் யோசனையின்றி அக்காரியத்திற் பிரவேசித்துப் பின் அபஜெயமடைந்து அவமானமுறுகின்றனர். கல்வியறிவில்லாப் பாமரர்கள்தான் இவ்வமுதவாக்கினைக் கவனிப்பதில்லையெனின், கல்வியறிவுள்ள அறிவாளிகளில்கூட பெரும்பாலோர் இவ்வாக்கினைக் கவனிப்பதாகத் தோன்றவில்லை. அந்தோ இஃது எத்தகைய மதியீனம். நாம் ஒரு நற்காரியத்தைச் செய்ய முயற்சி செய்வோமாயின் இக்காரியத்தைச் செய்ய, செய்துமுடிக்க நம்மால் இயலுமா இயலாதா வென்பதைப்பற்றி முன்னம் யோசனை செய்தல்வேண்டும். இயலுமாயின் அக்காரியத்திற் பிரவேசித்தல்வேண்டும். பிரவேசித்தபின் அக்காரியத்திற்கு எத்தகைய இடையூறுகள் நேரினும் விடா முயற்சியுடன் அக்காரியத்தை நிறைவேற்ற வேண்டும். இயலாதென்று தோன்றுமாயின் முதலிலேயே விட்டுவிட வேண்டும். ஏனெனில் யோசனையின்றி ஒரு காரியத்தில் பிரவேசித்து அரை குறையாக விட்டு யோஜிப்பதைப் பார்க்கிலும் அதைச் செய்யாமல் விட்டுவிடுவதே நலம். இதை நோக்கியே "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்—எண்ணுவமென்பதிழுக்கு" என்றனர் நாயனார்.

இவ்விஷயத்தை நாம் வரையநேர்ந்ததின் காரணம் பின்வருமாறு:— 1921-ம் வருஷம் அம்பா சமுத்திரத்திலிருந்து (தமிழபிமானி) என்னும் நாமதேயத்துடன் ஓர் மாதாந்தச் சஞ்சிகை வெளிப்போந்தது நம் நேயர்கட்குத் தெரியும். இதன் ஆசிரியர் ஸ்ரீமான் தமிழ்ப்பூஷணம் வாசுதேவ ராவ் கேய்க்வாட் அவர்கள். சொந்தக்காரரும் பிரசுரிப்பவரும் M. S. வைகுந்தநாதபிள்ளை. மானேஜர் A. M. சங்கரநாராயணன். வருட சந்தா ரூபாய் 2. இதன் ஆசிரியராவது மானேஜராவது நமக்கு அறிமுகமானவ

ரன்று. நம் "ஆனந்தபோதினி"யின்கண் வெளிப்போந்த எமது விலாசத்தைக் கண்ணுற்றோ என்னவோ இச்சஞ்சிகையின் மானேஜர் 4-3-21ல் நமக்கு ஓர் கடிதம் விடுத்திருந்தனர். அதில் [நமது சஞ்சிகையின் மாதிரிப் பிரதியொன்று தங்களுக்கு அனுப்பியிருக்கிறோம். நமது சஞ்சிகையின் நோக்கம் நந்தாய் மொழி நன்கு தழைத்துச் செழித்தோங்க வேண்டுமென்பதொன்றே. தாங்களும் அவ்வாறான நோக்கமுடையவர்களென்று நாம் முன்னமேயே அறிவோம். ஆகவே நமது பத்திரிகையைப் பரவச்செய்வதில் தாங்களும் சிறிது முயற்சி யெடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். நிற்க நமது பத்திரிகையைப் பற்றிய துண்டு விளம்பரங்கள் 50-ம் ஆர்டர் பார புத்தகங்களும் அனுப்பியிருக்கிறோம். அவைகளை நமது சஞ்சிகையின் அபிவிருத்தியைக் கோரும் நண்பர்களுக்கு அனுப்பி அவர்களைச் சந்தாதாரர்களாகச் சேர்ப்பீர்களென நாம் பெரிதும் நம்புகிறோம். ஒவ்வொரு ஆர்டர் புத்தகத்திலும் 25 பாரங்கள் அடங்கியிருக்கின்றன. புஸ்தகம் 1-க்கு கமிஷன் 6-4-0 எற்படுத்தியிருக்கிறோம். அதை அங்கீகரித்துச் சந்தாதாரர்கள் சேர்த்துக்கொடுப்பது தமிழ்ச் சேவையை ஆதரிப்பதாகுமென்பது சொல்லவேண்டியதில்லை] என வரைந்திருந்தார்.

அதற்கு நாம் இத்தகைய அரிய பெரிய தேசகைங்கரியத்திற்கு எம்மாலியன்ற உதவிசெய்யச் சித்தமாயுள்ளோமாயினும் அடியேனுக்குக் கமிஷன் தேவையில்லை எனப் பதில் விடுத்தனம். அதன்பின் ஆர்டர்பாரங்களும் துண்டுப்பிரசுரங்களும் வரப்பெற்று, நாம் வாக்களித்த பிரகாரமே நம்மாலியன்றவரை சில சந்தாநேயர்களை அறிமுகமாக்கிவைத்தோம். 1921-ம் வருஷத்திய ஜனவரி, பிப்ரவரிமீ சஞ்சிகைகள் வந்து சேர்ந்தன. அதன்பின் எக்காரணத்தாலோ நாளது வரை சஞ்சிகையாவது கடிதமாவது கிடைக்கவில்லை. நாம் கடிதம் வரைந்தால் பதில் இல்லை. சந்தாதாரர்கள் ஹிம்சையோ கூறமுடியாது. தமிழபிமானியோ தமிழையும் ரூபாவையும் ஆவாகனம் செய்துவிட்டது. சந்தாதாரர்கள் ரூபாயை வாபீஸ் செய்யச்சொல்லி வற்புறுத்தினர். என் செய்வது? பேசாமல் சந்தாதாரர்கட்கெல்லாம் ரூபாயை வாபீஸ் செய்துவிட்டேன். நேயர்களே! அடியேன் உபகாரம் செய்யப்போய் அபராதம் வந்ததைப் பார்த்தீர்களா?

எம்மைப்போல இன்னும் எத்தனைபேர்கள் மோசம் போனார்களோ தெரியவில்லை. எப்போது சஞ்சிகை நின்றுவிட்டதோ அப்போதே ரூபாயை வாபீஸ் செய்துவிடவேண்டும். இஃதன்றோ அறிவாளிகளின் செய்கை. இத்தகையோர்கள் நாமும் சஞ்சிகை நடத்துகிறோமென்று வெளிவருவது நகைத்தற்கிடமன்றோ?

நாளதுவரை இவ்வாசிரியரையாவது மானேஜரையாவது தூஷித்துக் கடிதம் வரைந்தவனல்லன். தற்காலமும் இவர்களின் குற்றத்தை எடுத்துக் காட்டியதேயன்றி தூஷித்ததாகாது. தமிழபிமானியின் மானேஜராகிய A. M. சங்கரநாராயணன் என்பவர் நம் ஆனந்தன் தொகுதி 3, பகுதி 11, 431-ம் பக்கத்தில் பின்வருமாறு வரைந்திருக்கின்றனர். (ஒவ்வொருவருக்கும் தன் குற்றம் தனக்குத் தெரியாதாகையால் வேறொருவர் சொல்லித்தானாகவேண்டும். ஒருவர் ஒரு குற்றம் செய்தபொழுது அக்குற்றத்தையறிந்தும் வாளாவிருக்குமொருவன் முன்னவன் செய்யும் குற்றத்திற்கு உதவியாயிருந்ததற்கொப்பாவான்] எனக் கூறியிருப்பதால் இவர் குற்றத்தை நாம் எடுத்துக்காட்டாவிடின் நம்மையன்றோ சாரும் அக்குற்றம்.

குறிப்பு:—ஆனந்தனின் சந்தாநேயர்களாகிய சகோதர சகோதரிகளே! இத்தகைய போலி ஆசிரியர்களையுடைய சஞ்சிகைகளுக்குச் சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்து நாம் நஷ்டமடைவதைவிட சஞ்சிகைகளிலெல்லாம் உயர்ந்ததும், அரிய பெரிய விஷயங்களைத் தன்னகத்திலடக்கியுள்ளதும், மாதாமாதம் தவறாமல் வெளிவருவதுமான நம் ஆனந்தனுக்கு வருஷா வருஷம் நாம் ஒவ்வொருவரும் நம்மாலியன்ற அளவு சந்தாதாரர்களைச் சேர்த்து வருவோமாயின் நம் ஆனந்தன் மாத மொரு முறையன்று, இருமுறை வெளிப்போந்து நமக்கு நல்லறிவைப் புகட்டி நம் இந்துதேசத்தை முன்னேற்றமடையச் செய்வான் என்பதில் எள்ளளவும் ஐயமின்றாம். நேயர்களே! இப்புண்ணிய கைங்கர்யத்தைச் செய்யப் பின்னடையாதீர்கள். இதற்கு முன் எத்தனையோ நேயர்களை நம் ஆனந்தனுக்கு அறிமுகமாக்கிவைத்துள்ளேனாயினும் சின்னாட்களாக காங்கிரசிலீடுபட்டுக் கதரை அபிவிருத்தி செய்வதில் கவனத்தைச் செலுத்தியதால் இத்தொண்டைக் கவனியாது விட்டனன். இனி அங்ஙனமன்று. இதுவும் ஒரு தேசத் தொண்டாகையால் நம் ஆனந்தனுக்கு இனி வருஷா வருஷம் இத்தனை சந்தாதாரர்களைச் சேர்த்தே தீருவது என்று ஓர் பிரதிஞ்ஞை செய்துகொண்டுளேன்.

அன்புள்ள சகோதரர்காள்! இதுவும் ஒரு தேசத்தொண்டென்பதை மறவாதீர்கள். நம் ஆனந்தனைப்போன்ற சஞ்சிகைகளால்தான் நம் தேசம் முன்னேற்றமடையவேண்டி யிருக்கின்றது. நம் பாரதமாதாவுக்குத் தொண்டுபுரியுங்கள். நம் ஆனந்தனும், ஆசிரியரும், அதிபரும் நீடூழிவாழ்க. பரமன் அருள்புரிவாராக.

ஏ. வ. துப்புசாமி முதலி,
ஏழூர், ராசீபுரம் தாலூகா.

குறிப்பு:—இதில் கூறப்பட்ட ஆசிரியராலேயே முன்பு இச்சென்னையிலேயே ஒரு சஞ்சிகை தொடங்கப்பட்ட இரண்டொரு மாதங்களில் நின்றுவிட்டது. அப்போது அதைப்பற்றிய விளம்பரத்தில் இந்த ஆசிரியர் "தமிழை அபிவிர்த்திசெய்வதற்கென்றே வடநாட்டில் அவதாரம் செய்து தென்னாட்டிற்கு எழுந்தருளினர்" என்று குறித்திருந்தது. பத்திரிகைகளில் நமது நாட்டார்க்கு அபிமானம் ஏற்கனவே குறைவாயிருக்கும் இக்காலத்தில், பத்திரிகை, சஞ்சிகை என்றால் அவநம்பகமுண்டாக்கத்தக்க இத்தகைய சம்பவங்கள் நிகழ்வது மிக்க விசனிக்கத்தக்கதே. அப்படிச் சஞ்சிகை நடத்தமுடியாமற்போனால் உடனே சந்தாக்களைத் திருப்பி யனுப்பிவிடுவதல்லவோ அத்தகைய கௌரவத் தொழிலை யேற்றுக்கொண்டவர்களுக்குத் தகுதியான நடக்கை. சஞ்சிகை விருத்தியடையவேண்டுமென்ற நல்லெண்ணங்கொண்டு சந்தாதாரர்களைச் சேர்ப்பவர்களுக்கு நஷ்டமும் இழிச்சொல்லும் பரிசாகக் கிடைக்கும்படி செய்வது பொதுவாய்ப் பத்திரிகைகளின் அபிவிர்த்திக்கே இடையூறு செய்வதாகும்.

பத்திரிகாசிரியர்.

---

## கலியுக விவாக விநோதம்.

நேயர்களே! மதுரையம்பதியில் நடந்த ஓர் விவாகத்தைப்பற்றி அடியில் வரைந்திருக்கிறேன். மணம் செய்துகொண்டவர்கள் பெயரையும் செய்துவைத்தவர்கள் பெயரையும் வரைந்தால் அசம்பாவிதமாகுமென்று வரையவில்லை. இக்காரியத்தை நடத்தினோர்களே இப்பத்திரி

கையைப் பார்க்க நேரிடின் அவர்களுடைய அனுமதியின்றிப் பிரசுரித்ததற்கு மன்னிப்பார்களாக.

சுமார் 13 வயதுடைய ஓர் அந்தணர் குலப்பெண்ணை அப்பெண்ணினுடைய தாய் தகப்பனூர் பணத்திற்காசைப்பட்டு, 60 வயதிற்கு மேற்பட்டவனும், ஒரு லக்ஷரூபாய் ஆஸ்தியை உடையவனும், முதல்தாரத்தை இழந்தவனுமாகிய ஒருவனுக்கு மணம்புரிய நிச்சயம் செய்திருந்தார்கள். அப்பெண், பெண்கல்வி கூடாதென்ற மூடநம்பிக்கைக்கு விரோதமாகக் கொஞ்சம் நன்றாய்க் கல்விகற்றவள். அப்பெண் முதல்தடவையாக, எதிர்கொண்டழைப்பு என்ற சடங்கு நடந்ததினத்தில்தான் தனக்கு நிச்சயித்திருக்கும் கணவனைப் பார்த்தாள். பிறகு பெண் தன் தகப்பனூரிடம் தனக்கு அப்புருஷனை மணம் செய்தால் தான் கிணற்றில் விழுந்து இறந்துவிடுவதாகக் கூறினுள். தனக்கு அக்கணவனை மணம் செய்துவைப்பதைவிட தன்னை தாய்தகப்பனூர் விஷமிட்டுக் கொன்றால் மிகவும் நலமாயிருக்கும் என்று சொன்னுள். பிறகு அடியில்கண்டபடி நடந்தது.

மறுநாட் காலை 5 மணிக்கு பெண்ணுறக்கத்தில் இருக்கும் சமயத்தில் அப்புருடன், பெண்ணினுடைய தாய், ஓர் புரோகிதன் இவர்கள் சென்று பெண்ணை எழுப்பி, தூக்கக் கலக்கத்தில் அப்பெண் கதறக்கதற, வீவாக சடங்குகளும், மந்திரமுமில்லாமல், தாலியைக் கட்டிவிட்டார்கள்.

இதுவும் கலியுக விந்தைகளில் ஓர் விந்தையே. தன்னை மணம்புரிந்து கொள்ள இஷ்டமில்லாத ஓர் பெண்ணை மணந்துகொள்ள ஓர் புருடன் எவ்வாறு சம்மதப்படுகிறுனோ! இதுவும் ஓர் விந்தையே.

பெண்ணின் தாய் யாது சொல்கிறுளென்றால் பெண் கணவனை இழந்துவிட்டாலும் பணம் இருக்கிறதல்லவா என்கிறுள். இந்தத் தாயினுடைய எண்ணம் நிறைவேற அப்பெண்ணினுடைய ஓர் ஜென்மம் வீணுகப் போகவேண்டியிருக்கிறது.

தாய் பணத்திற்காக விவாகம் செய்கிறுளே தவிர பெண்ணிற்காக விவாகம் செய்யவில்லை. இச்சதிபதிகளின் இல்வாழ்க்கை எவ்வளவு இன்பமாய் நடையுறுமோ.

குலம்வேண்டு மென்றிருப்பர் குலத்துளார்
    கல்வியினுற் குறையாளுனப்
பலம்வேண்டு மென்றிருப்பர் தந்தைமார்
    பரந்தபெருஞ் செல்வமுள்ள
தலம்வேண்டு மென்றிருப்பர் தாய்மார்கள்
    யௌவனமும் அழகும் சார்ந்த
நலம்வேண்டு மென்றிருப்பர் நாறுகுழன்
    நங்கைமார் நலத்தின் மிக்கார்.

என்று ஆன்ருேர்கள் கூறியுள்ளார்.

பெண்கள் எப்போதும் யௌவனமும் அழகும் பொருந்திய கணவனையே விரும்புவார்கள்.

"கைந்நிறைந்த தனத்தினும் கண்ணிறைந்த கணவனே மேல்" ஆயினும், எல்லாப் பெண்களுக்கும் அழகுள்ள கணவனே கிடைப்பது அரிது; இருந்தாலும் பெண் விரும்பாத ஓர் கிழவனுக்குப் பொருளுக்காக ஆசைப்பட்டுப் பெண்ணை விற்றுவிடுவது இழிவான செய்கையாகும்.

"ஓர் சந்தாதார்"

குறிப்பு :—இத்தகைய தாய் தந்தையர் சுத்த அறிவிலாத மூடர்களேயாவர். இவர்கள் தம் பெண்ணுக்கு நமன்போன்றவர்கள். அப்பெண் தன் வாழ்க்கை நலத்தை யிச்சன்மத்தில் இழக்கநேர்ந்த பாபம் இவர்களைச் சார்ந்தே தீரும். அந்தோ 60 வயது வரையில் உலகபோகத்தை யனுபவித்தும் விரக்தியடையாது, தன்னை மணக்க விரும்பாத ஒரு பெண்ணை வலிய மணந்த அந்த ஆடவன் மதியிருந்தவாறென்னையோ? மனிதரிலும் தேவருண்டு மனிதரிலும் விலங்குண்டு என்பது பொய்யோ! இத்தகைய கலியாண குணங்களைச் சுற்றத்தார் நடவாது தடுப்பதுதான் நீதியாகும். இத்தகைய அக்கிரமங்கள் நம் நாட்டில் சீர்பெறலரிது. ஆண்டவனருள்புரிவாராக. பத்திராசிரியர்.

---

# 9-ம் ஆண்டு.

அடுத்த ஆடிமீ 9-ம் ஆண்டு பிறக்கிறது. கடந்தவருடம் அனுப்பியது போல் ஆனிமாத சஞ்சிகையை வி-பி-யிலனுப்பி 9-ம் வருட சந்தாவை வசூலிக்கத் தீர்மானித்திருக்கிறோம். முன்பணமனுப்பாமல் வி-பி-யில் சஞ்சிகை பெறுவதால் 3 அணு அதிகச்செலவும் வீண் ஆலசியம் முதலியவைகளும் நேர்ந்தது யாவருமறிந்ததே.

கடந்த வருடம் மேமீ 30உ வரைக்குமே தவணை வைத்திருந்தோம். சிலர் ஜூன்மீ முதலில் சம்பளம் வரும்காலமானதால் அப்போது சந்தாவை யனுப்ப அனுகூலமாயிருக்குமென்று வரைந்தார்கள். அதனுல் பிறகு ஜூன்மீ 14உ வரைத் தவணையை யொத்திவைத்தோம். ஆனுல் அவ்விஷயம் ஜூன்மாதம் வெளியான சஞ்சிகையில்தான் பிரசுரிக்கப்பட்டது. ஆகவே அதனுல் சந்தாதாரர்களுக்கு அனுகூலமில்லாமற்போக அனேகம் வி. பி.கள் திரும்பிவர நேர்ந்தது.

யாவும் யோசித்தே யிப்போது **1923**ஷூ ஜூன்மூ **14**உ வரையில் தவணை யளித்திருக்கிறோம். ஆகையால் சந்தாநேயர்கள் ஜூன்மாத ஆரம்பத்திலாவது சந்தாவை அனுப்பிவிடலாம்.

அடுத்த வருடம் சஞ்சிகை வேண்டாதவர்கள் மேல்கண்ட தவணைக்குள் தெரிவித்துவிட்டால் வி. பி. யனுப்பாமல் 12-வது ஆனிமீ சஞ்சிகையை சாதாரண தபாலில் அனுப்பி விடுவோம். அப்படித் தெரிவிக்காமலிருந்து வி. பி. வந்தபின் வாபீஸ் செய்வோர்க்கு **12**-வது சஞ்சிகை பிறகு அனுப்பப்படமாட்டாது.

சஞ்சிகையை நிறுத்தும்படி வரைவோரும்,மணியார்டர் அனுப்புவோரும் சந்தா நம்பரை தெரிவிக்காவிட்டால் பின்னுல் வி. பி. வரும். ஆகையால் ஒவ்வொரு சந்தாதாரும் தயவுசெய்து இம்மாதம் வரும் சஞ்சிகையின் மேல்விலாசத்தில் பெயருக்குமுன் அச்சிலாவது, அல்லது வலது மேல் மூலையில் கையெழுத்திலாவது குறித்திருக்கும். நம்பரை யவசியம் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கிறோம்.

பத்திராதிபர்.

---

## பகவத்கீதை வசனம்.

(389-ம் பக்கத் தொடர்ச்சி.)

(ஆன்மாவைச் சம்சாரத்தினின்றும் கரையேற்றுவதைப்பற்றி பகவான் கூறுகின்றார்.)

ஏ பார்த்த! இவ்வாறு யோகத்தின்கண் ஆரூடனானவன் தனதான்மாவை விவேகத்தோடுகூடிய மனதால் சம்சாரத்தில் மூழ்காவண்ணம்

பாதுகாக்கவேண்டும். தனதான்மாவல்லாமல் தனக்கு மேன்மைசெய்யத் தக்கவர் வேறு யாருமில்லை. ஆன்மாவல்லாமல் தனக்குக் கீழ்மை செய்யத்தக்கவரும் யாருமில்லை. தனதான்மாவே தனக்குச் சத்துருவும் தனதான்மாவே தனக்கு மித்துருவுமாகும். (விவேகத்தால் மனதை வசப்படுத்தி சம்சாரபந்தத்தில் யான் எனதென்ற அபிமானங்கொள்ளாது தடுக்கவேண்டுமென்பதாம்.)

(எவ்வாறான ஆன்மா மித்துரு எவ்வாறான ஆன்மா சத்துருவென்று அர்ச்சுனன் கேட்ட சங்கைக்குப் பகவான் அருளிச் செய்கின்றார்.)

ஏ பார்த்தா! இப்பிறப்பிறப்பாகிய சாகரத்தைக் கடக்கும்வண்ணம் விவேகத்தோடுகூடிய மனதால் தன் தேகேந்திரியாதிரூபமான கூட்டத்தைத் தன் வசப்படுத்துபவன் எவனோ அவன் தனக்குத்தானே மித்துருவாகிறான். அப்படிக்கின்றி மனம்போன போக்கில் விட்டுவிடுவோன் தனக்குத்தானே சத்துருவாகிறான்.

(குருமுகமாக) சாத்திர ஆராய்ச்சிசெய்து சாத்திரங்களாலறியத்தக்க பயனை யபரோக்ஷமாயறிந்து, இந்திரியங்களைத் தன் வயப்படுத்தி விஷயாதிகளால் கலங்காத சித்தமுடையவனாய் ஓட்டையும் பொன்னையும் சமதிருஷ்டியாய்ப் பார்க்கக்கூடிய யோகியே இச்சம்சாரத்தின்கண் யாவரும் நடிக்கும் மாயா நடனத்தில் சிக்காமல் தான் சாக்ஷிமாத்திரமாய் அதைப் பார்த்துக்கொண்டு சலனமற்றவனாகவே யிருப்பான்.

ஏ அர்ச்சுனா! பிரதிபலன் கருதாமலே தனக்கு உபகாரம் செய்வோன், மிக்க அன்பான சினேகன், தனக்குத் தீமைசெய்வோன், தன்னை யலட்சியம் செய்வோன், தனக்குச் சினேகனுமல்லாமல், பகைஞனுமல்லாமல் மத்தியஸ்தனாயிருப்போன், தன் விரோதி, தன் பந்து, அன்னியன், ஈசுவரபக்தியுடைய சாதுவாகிய புண்ணியபுருடன், மகாபாபி ஆகிய யாவரிடத்தும் சமசித்தனாயிருப்பவனே யோகி எனப்படுவான்.

மேலான இந்த யோகத்தை யெவ்வாறு முயல்வதென்பதைப்பற்றிக் கூறுகிறோம் கேட்பாயாக.

இந்த யோகத்தைச் செய்ய முயல்வோன் ஆசையை யொழித்து, ஒருவரிடம் சென்று தனக்கொன்று வேண்டுமென்று யாசிக்காமல், யோகசித்திக்கென்று நூல்களில் கூறப்பட்ட மலைக்குகை முதலிய ஏகாந்த ஸ்தலத்தையடைந்து, சுத்தமாயுள்ள ஒரு ஸ்தானத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

அந்த இடம் அதிக உயரமாகவாவது தாழ்வாகவாவதிராவண்ணம், சமமாக தர்ப்பைபரப்பி அதன்மேல் மான்றோல் விரித்து அதன்மேல் மிருதுவான வஸ்திரம் விரிக்கவேண்டும். அப்புருடன் அத்தகைய ஆசனத்திலமர்ந்து இந்திரிய நிக்கிரகம் செய்து மனதை யொடுக்கி, அந்தக்கரணசுத்தியின் பொருட்டு சமாதியப்பியாசம் செய்யவேண்டும்.

(யோகாப்பியாசத்தின்பொருட்டு இதுகாறும் வாகியாசனம் முதலிய

வற்றைக் கூறி இனி அந்தர்முகத்தில் செய்யவேண்டிய விஷயங்களைப் பற்றிக் கூறத் தொடங்கி தேகத்தை யெவ்வாறு நிறுத்தல் வேண்டும் என்பதைக் கூறியருள்கின்றார்.)

ஏ அர்ச்சுன! அவ்வாறு ஆசனத்தில் அமர்ந்த புருடன் சிரசும், கழுத்தும், தேகமும் நேராகத் தண்டம்போலிருக்கும் வண்ணம் நேரே அசையாத நிலையில் இருந்து நாசி நுனியின்மேல் தன் கண்களின் பார்வையை நிறுத்திக் கடல்போலலையும் சஞ்சலரூபமான ஆசையும், தேகமயமும் தன்னைவிட்டு நீங்கச்செய்து அலையுமனத்தை யகத்தடக்கிப் பரமேசுரனுகிய என்னிடத்தில் சித்தம் நிலைத்திருக்கச் செய்யுமதுவே யோகமாம்.

மேற்கூறிய நியமப்பிரகாரம் நிரந்தரமும் சமாதி யோகம் பயில்வோர் முடிவில் சித்த நிரோத முடையவராய் நிருவாண சொரூபனுகிய என்னையே யடைவார்கள்.

(இனிப் பகவான் அந்த யோகம் பயில்வோனது ஆகார நியமம் முதலியவற்றைப் பற்றிக் கூறி யருள்கின்றார்.)

ஏ அர்ச்சுன! அதிக ஆஹாரம் புசிப்போனுக்கும் ஆஹாரத்தை அடியோடு நிக்கிரஹம் செய்வோனுக்கும் இந்தயோகம் கைகூடாது. அவ்வாறே நித்திரை, தொழில் முதலியவற்றிலும். அதாவது அதிகமுமல்லாது மிகக் குறைவாகவுமல்லாது மிதமான உணவும், அவ்வாறே மிதமான நித்திரையும், மிதமான தொழில் முதலியவையும் உடையவனுக்கே இந்த யோகம் கைகூடும்.

[இந்த யோகம் பயில்வோர் தமது வயிற்றின் அரைபாகத்தை ஆகாரத்தால் நிரப்பவேண்டும். அதாவது அரைவயிறு ஆகாரமே புசித்தல் வேண்டும். மீதி அரை வயிற்றில் கால்வயிற்றை ஜலத்தால் நிரப்பி மற்ற கால் வயிற்றைக் காலியாகவே விட்டுவிட வேண்டும் என்பது யோகநூல் விதியாகும். நித்திரை யதிகமாயின் தமோகுணமதிகரித்து யோகத்தைக் கெடுத்துவிடும். நித்திரை யதிகங் குறைந்தால் யோகம் பயிலுங் காலத்தில் உறக்கமுண்டாகி யோகங் கெடும். அவ்வாறே அதிக தொழிலால் தேகசிரமமுண்டாகி ஆயாசம் தோன்றி யோகங் கெடும். தேகத்திற்குக் கமனுதி ரூபத்தொழில் அடியோடின்றேல் சோம்பலும், ஆரோக்கியத் தாழ்வுமுண்டாகி யோகம் கெடும். ஆதலின் ஊண், துயில், தொழில் யாவும் மிதமாகவேண்டும் என்று விதிக்கப்பட்டது.]

(உணவாதிகளின் அளவைப்பற்றிக் கூறியபின் யோகம் பயிலத்தகாத காலங்கள் முதலியவற்றைப்பற்றி பகவான் அருளிச்செய்கின்றார்.)

"ஏ பார்த்த! இந்த யோகி அதிக அன்னம்புசித்து பொருமுதலுடையவனுக விருக்கும்போதும், ஆயாசமுள்ளனுகவிருக்கும்போதும், மனதில் வியாகூலம் கலக்கம் உடையவனுக விருக்கும்போதும் யோகாப்பியாசம் செய்யலாகாது. அப்படியே மிகுந்த குளிர்காலத்தும், மிகுந்த உஷ்ண காலத்தும், காற்று மிகுதியாயிருக்குங் காலத்தும் யோகம்செய்யலாகாது.

ஹே அர்ச்சுன! மிதமான ஆகாரம், நித்திரை தொழில் உடையவனுக்கே இந்த யோகம் கைகூடும்.

அர்ச்சுனன்:—ஏ பகவான்! இவ்வாறு முயன்று சம்பாதித்த யோகத்தால் அவன் அடையத்தக்க பலன் யாது?

பகவான்:—இந்தச் சமாதி யோகத்தை மேற்கூறியபடி அநுஷ்டிக்கின்ற யோகியின் சித்தமானது, காற்றில்லாத விடத்திலுள்ள தீபம் எவ்வாறு சற்றும் சலிக்காது சித்திரதீபம்போல் நிற்கின்றதோ அவ்வாறே, சலனமற்று நிற்கும். இவ்வாறு எப்போது அவன் சித்தம் சொப்பிரகாச சொரூபமான ஆன்மாவின்கண் இலயப்பட்டுவிடுகிறதோ, அப்போது அவன் ஆன்ம சாட்சாத்காரத்தாலுண்டாகும் பரமானந்தத்தை யடையாநிற்பன்.

எந்தச் சுகமானது இவ்விந்திரியங்களுக்கு விஷயமாகாமல் கேவலம் சுத்தபுத்தியால் கவருவதோ, எது காலதேசவஸ்து பரிச்சேத ரகிதமான பிரம்மரூப சுகமாகுமோ, எதையடைந்தோர் அதினின்றும் அந்நியமாகார்களோ, எதையடைந்தோர் அதற்கு ஒப்பானதும் உயர்வானதும் உண்டென்று கருதார்களோ, எந்தச் சுகமானது சத்துவப் பிரதானமான புத்திக்கே கவரும்படியான விஷயமாய் நிற்குமோ அதன்கண்ணே அந்த யோகி இலயித்திருப்பன். (தொடரும்)

சீடன்.

---

## நாம் க்ஷீணதசையடைந்ததன் காரணம்.

இந்தியர்கள், முக்கியமாய் ஹிந்துக்கள் க்ஷீணதசை யடைந்ததன் சில காரணங்களைப்பற்றி ஸ்ரீமான் டுங்கார்ஸீ தரம்ஸீ (Doongarsee Dharamsee) என்பவர் கல்கத்தாவில் மார்ச்சுமீ வெளியான 'வேல்பேர்' (Welfare) என்ற மாதாந்த ஆங்கில சஞ்சிகையில் எழுதியிருந்த விஷயத்திலிருந்து எடுத்ததன் மொழிபெயர்ப்பை யீண்டு வெளியிடுகிறோம். இது நம் நாட்டாரனைவருமே அவசியம் அறியவேண்டுவதாகையால் இதை நாம் ஆனந்தனில் பிரசுரிக்க நேர்ந்தது. நம் நாட்டார், அதிலும் முக்கியமாய் மாணவர்கள் அவசியம் இதைப் பன்முறை வாசித்து மனதில் வைத்து நடந்துகொள்ளவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்:—

இந்திய ஜனங்கள் அதிலும் முக்கியமாய் ஹிந்துக்கள் இப்போது க்ஷீணதசையையும் கேட்டையும் உண்டாக்கத் தூண்டுதல்களால் சூழப்பட்டிருக்கிறார்கள். இக்காலத்துள்ள இந்திய வாலிபர்கள் தேக பலத்திலும், கஷ்டத்தைத் தாங்கும் சக்தியிலும், ஊக்கத்திலும் இன்னும் தேக உயரத்திலுங்கூட முன் சந்ததியாரிலும் குறைந்தவர்களா யிருக்கிறார்களென்று வயோதிகர்கள் குறை கூறுவதைப் பன்முறை நான் கேட்டிருக்கிறேன். ஜனசமூகத்தின் தலைவர்கள் இதைப்பற்றிய முழு விவகாரத்தையும் சோதனை செய்தறியவேண்டிய காலம் இப்போது வந்துவிட்டிருக்கிறது. இராஜாங்க விவகாரங்களே நமது கவனத்தை யதிகமாகக் கவர்ந்துகொண்டதால், அதைப்போன்ற இதர முக்கியமான விஷயங்களை நாம் கவனிக்காமலே அசட்டையாயிருக்கிறோம். தேகக்ஷேமத்தைப்பற்றிய விஷயம் மிக்க அக்கரையாய்க் கவனிக்கப்படவேண்டியதொன்றாகும்.

கடந்த டிசம்பர்மீ கயாவிற்கூடிய ஹிந்துமகாசபையில் பண்டித மதன்மோஹன்மாளவியா அவர்கள் இதைப்பற்றித் தெளிவாக எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். ஹிந்துக்கள் பெரும்பாலும் கோழைகளாகிவிட்டார்

களென்றும், திடீரென்று ஒரு அவசிய சந்தர்ப்பம் நேர்ந்தபோது அவர்கள் மனோவல்லமையையும், துணிகரத்தையும், தைரியத்தையும் வெளியிடுவதில்லையென்றும் அவர் எழுதியிட்டுக்கொண்டார். அத்தகைய சமயங்களில் அவர்கள் தம்தம் வரையில் அல்லது தத்தம் குடும்பம் வரையில் பாதுகாத்துக்கொள்ள முயல்கிறார்களேயன்றி, கிராமம் அல்லது ஜில்லா அல்லது தேசம் முழுமையும் க்ஷேமமடைய வேண்டுமென்பதைக் கவனிப்பதேயில்லை. ஒருவன் நன்றாகக் கவனித்தால் ஹிந்து சமுகத்தாரிடம் சமயத்தில் எதிர்பார்க்கப்பட்ட தைரியத்தை அனேக சந்தர்ப்பங்களில் அவர்கள் காட்டவில்லை யென்று உடனே அறிந்துகொள்ளலாம். இதற்கு ஒரே யொரு திருஷ்டாந்தமாக ஒரு வருடத்திற்கு முன் மலையாளத்தில் நிகழ்ந்த மாப்பிள்ளைகள் கலகத்தைக் கூறுகிறேன். அங்கு ஹிந்துக்களே யதிகமாகவிருந்தும், அவர்கள் ஒன்றுசேரும் திறமையில்லாததாலும், கோழைத்தனத்தாலும், அவரவர்கள் தப்பித்துக்கொள்வதையே கவனித்ததாலும் அவர்களுக்கும் அவர்கள் மாதர்களுக்கும் மிக்க குரூரமான துன்பங்கள் சம்பவித்தன. பாஞ்சாலத்திலுள்ள மூல்டான் நகரத்திலும், அங்குள்ள ஜனங்கள் வீரம் பொருந்தியவர்களாகவிருந்தும், குறைந்த அளவில் மலையாளத்தில் சம்பவித்ததுபோன்றே நடந்தது. ஒரு சமயத்தில் ஒரு முரட்டு வெறியன் கரத்தில் ஒரு சிறு கத்தியை வைத்துக்கொண்டு நூற்றுக்கணக்கான ஜனங்களை இரண்டுமணிநேரம் கிட்ட நெருங்கவிடாமல் மிரட்டிக்கொண்டிருந்ததைப் பிரத்தியட்சமாய்க் கண்டேன். ஒரு சமயம் சுமார் நூறுபேர்கள் கூட்டமாய்க் கலியாணத்திற்குச் சென்றுகொண்டிருந்தபோது ஒரேயொரு வழிபறிக்கள்ளன் அத்தனை பேரையும் மடக்கிக் கொள்ளையடித்துக்கொண்டு போனான். ஒருவரேனும் அவனைத் தடுக்கக் கைதூக்கக்கூடிய தைரியமுடைத்தானவர்களாக விருந்திருக்கவில்லை. தெருச்சண்டைகளிலுங்கூட பலஹீனமான கட்சிக்கு உதவி கிடைப்பதரிது. அக்கட்சி போலீஸார் உதவியைத்தான் எதிர்பார்க்கவேண்டும்.

விஷயங்கள் இம்மாதிரி நிலைமையிலிருப்பதற்குக் காரணங்கள் என்ன?

சில வேளைகளில் குழந்தைகள் தொந்தரவு செய்யாது பேசாமலிருப்பதற்காக பேய் பிசாசுகளைக் கூறி யவர்கள் மனதில் பீதியை யுண்டாக்குகிறார்கள். இப்பயம் குழந்தைகளின் சுபாவத்திலேயே ஆழ்ந்து வேரூன்றி விடுகிறது. இவர்கள் பெரியவர்களானபோதும் அதை யொழிக்க முடிவதில்லை. வயது வந்தவர்களிலும் அனேகர் பேய் இருக்கிறது என்ற வதந்தியுள்ள விடத்திற்குத் தனியாகச் செல்லப் பின்னடைவதைக் காண்கிறோம். அனேகம் வாலிபர்களிடமுள்ள இத்தகைய ஆண்மையற்ற நடக்கையான தீமைக்கு இதுவே முதற்காரணமாகும்.

முற்காலத்தில் ஒவ்வொரு கிராமங்களிலும், நகரங்களிலும் வாலிபர்களுக்கு இந்திய விளையாட்டுகளிலிருந்த பிரியம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே போகிறது. முற்காலத்தில் ஒருவர் எங்கு சென்றாலும் பிள்ளைகள் குஸ்தி செய்தல், கோல் வித்தையில் பழகுதல், தாண்டுதல், நீஞ்சல், ஓடுதல், படகு வலித்தல், இந்தியப்பந்தாடல் முதலிய விளையாட்டுகளில் பழகுவதைக் காண்பது நிச்சயம். பிள்ளைகளுக்குப் பலத்தையும், சுறுசுறுப்பையும், சுகத்தையும் அளிக்கத்தக்க அவ்விளையாட்டுகள் இப்போதில்லை. மேலும் இந்த விளையாட்டுகளால் ஒரு செலவுமில்லை. இந்திய வாழ்க்கைக்கு அவைகள் தகுதியானவைகள். இப்போது அவை கை

விடப்பட்டு, எல்லாராலும் முடியாத அதிக பணச்செலவுள்ள மேல்நாட்டு விளையாட்டுகளை இந்திய வாலிபர்கள் கைக்கொண்டிருக்கிறார்கள். அனேகம் பிள்ளைகள் அந்த விளையாட்டுகளை யிப்போது பழைய தரா வென்றும் கருதுகிறார்கள். (இது நம் நாட்டின் கெட்டகாலக் குறியன்றி வேறில்லை.)

இந்தியப் பெற்றோரில் அனேகர் தம் புத்திரர்களைப் பெயருக்குமட்டும் பெரிய மனிதர்களாக்கிவிடப் பிரியப்படுகிறார்கள். தலைமயிரைக் கத்தரித்துவிட்டுச் சீவிக்கொண்டு, பொற்கட்டுப்போட்ட மூக்குக்கண்ணாடியும், நேர்த்தியான கேம்பிரிக் ஷர்டும், சாந்திபூர் வேஷ்டி அல்லது காற்சட்டையும், பளபளப்பான டாஸன் பூட்ஸும், பட்டு மேஜோடும் அணிந்து, வாசனையிட்ட கைக்குட்டையும், வெள்ளிப்பூண்கட்டிய கோலும் கையிற் பிடித்துக்கொள்ளவேண்டியது. இக்காலத்தில் பூரண பெரிய மனிதனாவதற்கு அவசியமாக வேண்டத்தக்கவை. பெரியமனிதன் கஷ்டப்படலாகாது, கையால் வேலைசெய்யக்கூடாது. குடியானவர்கள் பயிரிடுகிறார்கள், கொற்றர் கட்டிடவேலைசெய்கிறார்கள், தச்சர் மரவேலைசெய்கிறார்கள், கொல்லர் இரும்புவேலைசெய்கிறார்கள். ஆனால் ஒரு பெரியமனிதன் மகன் இத்தகைய வேலைகளொன்றும் செய்யமுடியாது. அவன் பெரிய மனிதனாகவே பிறந்தவனானதால் தன் பிறப்பின் சம்பிரதாயப்படி நடக்கவேண்டும். அவன் ஆள் ஒழுங்காய், நுட்ப தேகியாய், குறைந்த பார்வையுடையவனாய், செல்லப்பிள்ளையாய், சோம்பேறியாய், பெருமைக்காரனாய், மேலுலகத்திலிருந்து வந்தவன்போல் நடந்துகொள்பவனாய் இருக்கவேண்டும். அவன் பகலில் தூங்கவேண்டும். இரவு முழுமையும் கேளிக்கையிலும் சுகபோகங்களிலும் கழிக்கவேண்டும்.

அவனுடைய தேகசுகங்களைக் கவனிப்பதற்குக்கூட வேலையாட்கள இருக்கிறார்கள். கணக்கெழுத குமஸ்தாக்களும், அவன் பூஸ்திதிகளைக் கவனிக்கவும் அவற்றிலுள்ள குடிகளைக் கொள்ளையடிக்கவும் காரியஸ்தர்களும் இருக்கிறார்கள். வசிக்கப் பெரிய வீடும், மோடார் இரதங்களும், கோச் வண்டிகளும் பந்தயக் குதிரைகளும், வீண் விரையம் செய்யப் பணமும், சில வேளைக்களில் நடித்துச் சந்தோஷமுண்டாக்க நடன மாதர்களும், குடிக்க ஒயின் வகைகளும் இருக்கின்றன. இந்த உலகில் அவனுக்கு வேறென்னவேண்டி யிருக்கிறது?

ஒவ்வொரு தந்தையும், அவன் செல்வவந்தனாயினும், ஏழையாயினும், தன் புத்திரன் சர்வகலாசாலையில் வாசித்து உயர்ந்த பட்டதாரியாகி வக்கீலாகவோ, டாக்டராகவோ வரவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். தேகசம்பந்தமான கல்வியை யடியோடு அசட்டைசெய்துவிடுகிறார்கள். பிள்ளைகள் ஒரு நெருக்கமானதும் சுகாதாரமற்றதுமான சந்திலுள்ள மாணவர் போஜன சாலையில் விடப்படுகிறார்கள். அங்கு மழைகாலத்தில் முழங்காலளவு சேறும் துர்நாற்றமுமிருக்கும். அளிக்கப்படும் ஆகாரமோ புஷ்டியளிக்கக்கூடாததும், தேகசுகத்திற்குத் தகுதியற்றதுமாயிருக்கும். அப்படிப்பட்ட விடங்களில் பிள்ளைகள் இரவு நெடுநேரம் வரையில் தங்கள் பாடங்களை யதிகமாய் மனப்பாடம் செய்கிறார்கள். தங்கள் கூட்டாளிகளோடு நயமான சிற்றுண்டிக் கடைகளுக்குச் செல்கிறார்கள். 'காபி கிளப்' என்ற இக்கடைகள் நவீன நாகரீகத்தின் ஒரு சாபமேயாகும். இவற்றிற்குச் செல்வதோடு நாடகங்கள், ஸினிமா படக்காட்சிகள் இவற்றைக் காணச் செல்கிறார்கள். பின்னால் வக்கீல்களாகவும், டாக்டர்களாகவும், நியாயாதிபதிகளாகவும் பிரபல கௌரவ உத்தியோகஸ்தர்களாகவும் ஆகும் இவர்களுடைய வாலிபகாலம் இவ்வாறு கழிக்கப்படுகிறது.

தங்கள் புத்திரர்கள் பட்டதாரிகளாகிச் செல்வம்பொருந்திய குடியில் பெண் கட்டிக்கொண்டு இராஜாங்கத்தில் ஒரு உத்தியோகத்தில் அமர்ந்துவிட்டால் போதும் என்பதே பெற்றோர்களுக்குள்ள ஆசைமுழுமையும். பிள்ளை தக்க தேகப்பயிற்சி செய்யவும், கஷ்டமான வேலையைச் செய்யவும், ஆண்தன்மையான விளையாட்டுகளில் பழகவும், கிருஷித் தொழில் முதலிய வேலைகளில் பயிலவும் கிரமமாகத் தூண்டப்படுவதில்லை. ஆகையால் இவர்கள் தேகத்தில் பலமில்லாதவர்களாய், தேசாபிமானமுடையவன் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யக்கூடாதவர்களாய், இன்னும் அவசரம் நேரின் கள்ளர் போக்கிரிகளிடமிருந்து தங்களையும் தங்கள் பொருள்களையும் பாதுகாத்துக்கொள்ளும் சக்தியில்லாத மனிதர்களாகவே வளர்கிறார்கள். இப்படிப்பட்டவன் காரியசித்தி பேறுவானும், வாயினாலுமே ஆகவேண்டியிருக்கிறது. இவன் தன்னையும், தன் சொத்தையும் இன்னும் தன் மாதர்களையும் காப்பாற்றுவதற்காக மேல்நாட்டு மனிதரின் உதவியைக் கோரவேண்டியவனாக விருக்கிறான். இத்தகைய ஆண்மையற்ற வாழ்க்கையிலுள்ள ஜனங்களின் நிலைமை அந்தோ என்ன பரிதாபமானது! இத்தகைய ஜனங்கள் பலசாலிகள்ளாகவும், தைரியமும், ஊக்கமுமுடையவர்களாகவும் ஆய்விடலாமென்று எப்படி எதிர்பார்ப்பது?

பாலியவிவாகத்தைக் குறித்துப் பிரசித்திபெற்ற தலைவர்களும், டாக்டர்களும், இந்தியாவின் க்ஷேமத்தைக்கோரும் அனேகரும், அனேக ஜாதீயச் சபைகளும் கண்டித்து அதை நிறுத்தவேண்டுமென்று முயற்சிசெய்து அதில் திருப்தியான ஜெயமடையவில்லை. இதை நிறுத்தினாலன்றிப் பலம் பொருந்திய சந்ததியாரை யெதிர்பார்க்க முடியாது.

எனக்கு முதன்மைவாய்ந்த ஒரு பெரிய இந்திய வர்த்தகர் தெரியும். அவருக்குப் பந்தயக் குதிரைகளில் மிக்க விருப்பம். அதற்காக அவர் முதல் தரமான பந்தயக் குதிரைகளை வைத்துக்கொண்டிருந்தார். அடடா! அக்குதிரைகளின் போஷிப்பைப்பற்றியும், பயிற்சியைப்பற்றியும், தேகசுகத்தைப்பற்றியும் அவர் எடுத்துக்கொண்ட சிரத்தைக்கு அளவேயில்லை. அவைகளுக்கு அரண்மனைகள் போன்ற இலாயங்கள் காலந்தவறாது கிரமமான ஆகாரம் பயிற்சி, தினம் மிருக வைத்தியர் வந்து பார்வையிடல், அதிக சம்பளம் வாங்கும் காவலர்கள், யாவற்றையும் தாமே நேரில் பார்வையிடல், இவ்வளவும் அக்குதிரைகளுக்கு நடக்கும். ஆனால் இதில் நூற்றில் ஒரு பாகம்கூட இந்தப் பெரிய மனிதர் தமது பிள்ளைகளைப்பற்றிக் கவனிப்பதில் அக்கரை செலுத்தவில்லை. அவர்களை மூடரான வேலைக்காரர் வசத்தில் விட்டுவிட்டார். (தொடரும்.)

---

## தபால் கொள்ளைக்காரர்கள்.

(399-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்ளர்கள் கருடனைக்கண்ட நாகம்போல் நின்றநிலையிலேயே நின்றுவிட்டார்கள். அவர்களுக்கு ஒன்றும் தோன்றாமல் பிரமித்துவிட்டார்கள். இரங்கநாதனும் அந்த நிலையிலேயே யிருந்தபோதிலும் சற்று தைரியங்கொண்டு ஆனந்தஸிங்மேல் பாய உத்தேசித்தான். அதே விநாடி அறையின் கதவு படீரென்று திறக்கப்பட்டதும் ஒரு கூட்டம் போலீஸார் ஆயுதபாணிகளாய் அறைக்குள் நுழைந்து விட்டார்கள்.

இரண்டு விநாடிக்குள் எல்லாக் கள்ளர்கள் கைக்கும் விலங்கு மாட்டப்பட்டது. இரங்கநாதன் மட்டும் நெடுநேரம் மல்லாடிக் கடைசியில்

நாம் இவர்கள் கையில் சிக்குவதைவிட இறந்துபோவதே நலமென் றெண்ணித் தன் துப்பாக்கியைத் திருப்பி மார்பில் வைத்துத் தன்னைச் சுட்டுக்கொண்டு தரையில் வீழ்ந்தான்.

இத்தகைய குழப்பம் நடந்துகொண்டிருக்கையில் ஆனந்தஸிங் உள வால் போலீஸாரோடு கூடவந்த அம்பலவாணன் கோமளாங்கியின் கையைப் பற்றிக்கொண்டு "ஆ! என் அன்பே இனி யுனக்கொரு ஆபத்து மில்லை. உன் மனதிற்குத் திருப்தியா யிருந்தால் இன்றுமுதல் நீ என்னை விட்டுப் பிரியாமலிருக்கலாம். உனக்கு அப்படி யிருக்கச் சந்தோடந் தானு?" வென்றான்.

அவன் தன்மேல் காதல்கொண்டிருப்பதையும் அவன் அக்காதலை வெளியிடும் நுட்பத்தையும் உணர்ந்த கன்னிகை யுடனே யவன் தோட்க ளைப் பற்றிக்கொண்டு "உனக்குப் பிரியமானால் என்னுயிருள்ளமட்டும் உன்னை விட்டுப் பிரியாமலிருக்க எனக்கு மிக்க சந்தோஷமே" யென்றாள். உடனே காதலரிருவரும் ஆனந்தத்தோடு ஆலிங்கனம் செய்துகொண் டார்கள்.

இவர்கள் இந்தச் சந்தோஷத்திலிருக்கும்போது ஆனந்தஸிங் சும்மா இல்லை. கீழே விழுந்து மரணத்தறுவாயிலிருக்கும் இரங்கநாதனை நோக் கினன். அவன் ஆனந்தஸிங்கையே நோக்கி "இங்குவா" வென்று சமிக்கை செய்தான். ஆனந்தஸிங் அவனருகிற் சென்றதே அவன் யாவரையும் நோக்கி,

"இறந்துபோகிற மனிதனுகிய நான் என் வாக்குமூலத்தைக் கூறு கிறேன். யாவரும் கேளுங்கள்" என்றான். உடனே யாவரும் மௌன மாய் அவனையே நோக்கிக்கொண் டிருக்கத் தொடங்கினார்கள்.

இதுகாறும் நடந்த சொல்லொணுத அக்கிரமங்களையும் இரக்கமற்ற செயல்களையும் கூறத் தொடங்கினன். எவ்வாறெனின்:—

"நான் இப்போது கூறுவது 18 வருடங்களுக்கு முன் நடந்தது. அப்போது தென் தேசத்தின் கோடியில் இரண்டு குடும்பங்களிருந்தன. அந்த இரண்டு குடும்பங்களின் நிலங்களும் ஒன்றாய்ச் சேர்ந்திருந்தன. வீடு களும் ஒன்றின் பக்கத்தில் ஒன்றிருந்தன. ஒரு குடும்பத்திற்கு இரவணப் பன் என்ற ஒரே பிள்ளை. ஒரு குடும்பத்திற்குக் கமலாம்பாள் என்ற ஒரே பெண். அப்பெண் இரவணப்பனுக்கு இரண்டு மூன்று வருடம் சிறியவள். இரண்டு குடும்பங்களும் மிக்க சினேகப்பான்மையா யிருந்தார்கள்.

சிறுவர்கள் இருவரும் ஒரு இடத்திலேயே வசிப்பதும், ஒரே பாடசா லைக்குச் செல்வதும், ஒரே யிடத்தில் விளையாடுவதுமா யிருந்தார்கள். வயது முதிர முதிர இவர்கள் நட்பு முதிர்ந்து காதலாய் மாறிவிட்டது. இரவணப்பன் கமலாம்பாளே தன் உயிர்த்துணைவியென்றும் அவளையன் றித் தனக்கு உலகசுகமேயில்லையென்றும் எண்ணி அவள்மேல் பூரணமான காதல் கொண்டிருந்தான். கமலாம்பாளோ அவன்மேல் மனமொத்த

சிநேகித வாஞ்சை மட்டும் கொண்டிருந்தாளே யன்றி யவன்மேல் காதல் என்பது அவளுக்கு அடியோடில்லை.

இவ்வாறிருக்கையில் இரவணப்பனுக்கு வயது ஏறிவிடவே தான் காதல்கொண்டிருக்கும் கன்னிகையை மணம்புரிந்துகொண்டால்தான் அவன் மனம் ஒரு நிலையில் நிற்கும்போல் தோன்றியது.

ஆகையால் ஒருநாள் அவன் கமலாம்பாளிடம் தன் எண்ணத்தை மரியாதையோடு வெளியிட்டான். கமலாம்பாள் மிக்க அன்போடும் மரியாதையோடும் தனக்குச் சிநேகபாவமாய் அவன்மேல் பூரண அன்பிருப்பதாகவும், ஆனால் காதல் என்ற விஷயம் எள்ளளவும் இல்லை யென்றும் கூறிவிட்டாள்.

இவள் மொழிகளைக் கேட்டதே இரவணப்பனுக்கு உலகமே தனக்குப் பயனற்றுவிட்டதுபோலாய்விட்டது. அவன் மனம் இந்த ஒரே விசனத்தைக் கொண்டதேயன்றி உலகமே யடியோடு தன்னைவிட்டு நீங்கிவிட்டதுபோல் இருந்தது. அவன் அதே எண்ணமா யொருவித பித்தங் கொண்டவனாய் ஊரைவிட்டு வெளி நாடுகளுக்குச் சென்றான். சுமார் மூன்றுமாதங்கள் கழிந்தபின் ஒரு பத்திரிகையை வாசித்தபோது கமலாம்பாளுக்குக் கலியாணமாய்விட்டதாய் அறிந்தான். (தொடரும்.)

ஆரணி - குப்புசாமி முதலியார்.

---

## பொது சமாச்சாரம்.

### மானக் கேடு.

ஆங்கிலம் நாகரிக நாடு என்பதை இந்தியர்கள் கேட்கக் கேட்க உள்ளம் புழுங்கிக் குழையாமல் இருக்க முடியாது. சீமையிலே நாகரிக ஊற்றுக்கள் இருக்கின்றனபோல் இருக்கிறது. ஒருவன் அந்த ஊற்றுக்கள் ஏதேனும் ஒன்றில் நீராடி வெளி ஏறிவிட்டால், அவன் அந்த வகையில் நாகரிகம் அடைந்து விட்டதாக ஆங்கிலேயர்களின் நடிப்பு. அதுவே நம்மவர்களுக்குப் படிப்பு.

அரசியல் பொறுப்புத் தெரியவேண்டுமோ? அரசாட்சியை நிர்வகித்து நடத்தவேண்டுமோ? அப்படியானால் இந்தியர்கள் சீமைக்குச் சென்று ஐ. ஸி. எஸ். பரீக்ஷைக்குப் படித்தல்வேண்டும். படித்தவுடனே, நாகரிகம் முதிர்ந்து, பழுத்து உதிர்ந்து விழுமாம். எத்தனை ஆயிரம் ரூபாய் செலவு. பிள்ளைகளை மேல்நாட்டு நாகரிகத்துக்குப் பறிகொடுத்துவிட்டு, எத்தனை தாய்மார்கள் அகாலமரணம் அடைகின்றனர். பையன் ஜில்லாகலெக்டர் ஆகின்றான். தகப்பன் தன் விதியை நொந்து சாகின்றான். பிள்ளையின் ஆங்கில மனைவி நகைக்கின்றாள். பாரதமாதா தவிக்கின்றாள்.

வயித்திய முறையில் தேர்தல் அடையவேண்டினால், மறுபடியும் சீமைக்குச் செல்லவேண்டும். ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வருமுன்னர் இத்தேசத்தில் வாகட முறையே கருப்பாய் இருந்ததா? நோய்க

ளுக்கு மருந்தே இருந்ததில்லையா? மனிதனுக்கு வயது நூறு என்று வகுத்த நூற்கள் பொய்யா? அவ்வாறு வாழ்ந்த மனிதர்களும் பொய்யா? பழுக்கக் காய்ச்சி உருக்கிவிட்ட இரும்புக்கிராதிகளை யொத்த எலும்புகளைப் படைத்த இந்தியர்களின் தேக அமைப்பைக்கண்டு வியக்காதவர்கள் யாவர்? வைரம் பாய்ந்த உடல்களைத் தாங்கிய இந்தியர்களுக்கு வாழ்வின் மருமமும் நோய்க்கு மருந்தும் தெரியாதாம்! என்ன விநோதம்!

சட்டத்தின் நுட்பம் தெரியவேண்டுமோ? சீமைக்குப்போ, ஆக்ஸ்போர்டில் விருந்து சாப்பாடு இரண்டு மூன்று ஆண்டுகள் சாப்பிடு. சட்டமெல்லாம் உள்ளே சென்று ஜீரணமாகிவிடும். பிறகு நாம் சட்ட நிபுணர்கள் ஆகிவிடலாம். சட்டத்திலே என்ன நுட்பம் இருக்கின்றது என்று எனக்கு விளங்குவதேயில்லை. எனது சட்ட நிபுண நண்பர்கள் இதை வாசித்துவிட்டு நகைக்கலாம். கற்பனைப்பொய்களைப் புகட்டும் முறை என்பதைச் சட்டம் என்று சொன்னால் இயற்கையான மனிதனுடைய நல்ல குணத்தைச் சட்டம் சீக்கிரம் மாற்றிவிடும் என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். வக்கீல் என்ற கூட்டம் இந்தியா தேசத்தில் தோன்றி நிலைத்து, வேரூன்றிய பின்னர், குவிந்து மலிந்துகிடக்கும் பொய்யை அளந்து சொல்ல முடியாது பாவம்! நமக்கு இதினின்றும் எப்பொழுதேனும் விடுதலையுண்டா? பொய்சொல்லக் கற்றுக்கொள்ளவேண்டுமோ? இதுவா நாகரிகம்!

நன்ருய் ஜோடுதைக்க வேண்டுமோ? தோலைப் பதனிடவும் பின்னர் நயமான அட்டையை மேலே தைக்கவும், வர்ணம் தடவி மெருகு போடவும், கடைசியாக ஒன்றுக்கு மூன்ருக விற்கவும் சீமைக்குப்போய்க் கற்றுக் கொள்ளலாம். சம்பாத்தியம் என்ற சாக்கிலே சகோதரமனிதனை எய்க்கக் கற்றுக்கொள்ள வேண்டுமானால் சீமைக்குச் செல்லவேண்டும். இவை யாவும் நாகரிகம் கற்றுக்கொள்ளும் முறை. இவை யாவும் போகட்டும்.

தருமசொத்துப் பரிபாலன மசோதாவைப்பற்றிய நடவடிக்கைகளில் ஒரு விநோதம் கண்டேன். அது எல்லோருக்கும் வருத்தம் உண்டாக்கும். தருமபரிபாலன கமிஷன் ஒன்று புதிதாய் ஏற்படப்போகிறதாம். அதற்குத் தலைவராய் ஒரு பாரிஸ்டர் இருக்கவேண்டுமாம். அல்லது அனுபவமுதிர்ந்த வக்கீல் இருக்கவேண்டும்! தருமசொத்துப் பரிபாலனத்துக்கு ஒரு பாரிஸ்டர் (ஹிந்து) தேவையாமே! நாகரிக முதிர்ச்சிக்கும் அறிவு தெளிவுக்கும் பக்ஷபாதமில்லாமைக்கும் மேனாட்டு நாகரிகம் லீல் வைத்தால்தான், நல்ல சாக்குப்போலிருக்கின்றது? என்ன மானக்கேடு! நமக்குச் சொந்த நாகரிகம் இல்லையா? நமது நாகரிகம் ஆங்கில உலையில் வார்க்கப் பட்டு, மேனாட்டு நாகரிக அச்சில் உருவாகவேண்டுமானால் நாம் பிழைத்திருப்பதைவிடச் சாகலாம். நமது மூதாதைகளின் வாழ்வையும் பெரு முயற்சிகளையும் பாழ்படுத்தி அவமானத்துக்குள்ளாக்கி, நாம் வாழ்வதைக் காட்டிலும், நாம் உயிர் துறப்பது மேலாகும். (சு-ன்.)

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்.

## உருத்ரோத்காரி௵ ஆனி௴—கலி 5025—சாலிவாகனம் 1846
## பசலி 1332—கோல்லம் 1098-99—ஹிஜரி 1341
## இங்கிலீஷ் 1923௵ ஜூன்௴—ஜூலை௴

| ஆனி௴ | ஜூன்௴ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | வெ | பிர32-53 | மிரு3-55 | சித்60 | மிஜஜேஷ்டசுத்தம், ஷட சீதி புண்யகாலம் |
| 2 | 16 | சனி | து33-35 | திரு6-50 | சித்60 | சோபபத [ந்தி |
| 3 | 17 | ஞா | திரி33-25 | புன8-48 | சித்60 | ரம்பாதிரிகை, புத்த ஜய |
| 4 | 18 | திங் | சது32-15 | பூச9-45 | சித்60 | மாசசதுர்த்தி விரதம் |
| 5 | 19 | செவ் | பஞ்30-15 | ஆயி9-53 | சித்60 | சஷ்டி,பிரயாணம் விலக |
| 6 | 20 | புத | சஷ்27-18 | மக9-8 | சி9-8அ | கரிநாள் |
| 7 | 21 | வியா | சப்24-10 | பூர7-28 | சி7-28ம | ஆனித் திருமஞ்சனம் |
| 8 | 22 | வெ | அ18-38 | உத்4-18 | சி4-13அ | கடகாயனம் நா-26-55 |
| 9 | 23 | சனி | நவ12-58 | அஸ்1-25<br>சித்57-15 | ம57-15அ | தசஹார விரதம், அவமா கம் |
| 10 | 24 | ஞா | தச6-35<br>ஏ59-43 | சுவா52-20 | சி52-20ம | ஸ்மார்த்த ஏகாதசி, நிர் ஜல ஏகாதசி [தசி |
| 11 | 25 | திங் | து52-30 | விசா47-10 | ம47-10சி | மத்வ, வைஷ்ணவ ஏகா |
| 12 | 26 | செவ் | திர45-13 | அனு41-55 | சி41-55ம | |
| 13 | 27 | புத | சது38-15 | கேட்36-55 | சி36-55ம | |
| 14 | 28 | வியா | ○31-53 | மூல32-40 | சித்60 | |
| 15 | 29 | வெ | பிர26-35 | பூரா29-25 | பி29-25சி | |
| 16 | 30 | சனி | துதி27-43 | உத்27-48 | சித்60 | |
| 17 | 1 | ஞா | திரி21-0 | திரு27-43 | அ27-43ம | |
| 18 | 2 | திங் | சது20-53 | அவி29-33 | சித்60 | |
| 19 | 3 | செவ் | பஞ்22-43 | சதை33-25 | மர60 | |
| 20 | 4 | புத | சஷ்26-10 | பூரட்38-45 | அ38-45சி | |
| 21 | 5 | வியா | சப்31-8 | உத்ரட்45-30 | சித்60 | கிரகபிரவேசம் |
| 22 | 6 | வெ | அ37-0 | ரேவ52-53 | அமி60 | திரிலோசன பூஜை |
| 23 | 7 | சனி | நவ43-8 | அசு60 | சித்60 | திருதின ஸ்பிருக் [க்க |
| 24 | 8 | ஞா | தச48-53 | அசு0-23 | சித்60 | மாடுவாங்க, அடுப்புவை |
| 25 | 9 | திங் | ஏ53-45 | பர✻7-25 | சித்7-25ம | மத்வ சர்வ ஏகாதசி |
| 26 | 10 | செவ் | து57-33 | கிரு13-35 | சி13-35அ | கடன் நீக்க |
| 27 | 11 | புத | திர60-0 | ரோ18-33 | சித்60 | பிரதோஷம், சீமந்தம் |
| 28 | 12 | வியா | சது60-0 | மிரு22-10 | மர60 | மாச சிவராத்திரி |
| 29 | 13 | வெ | ச●0-58 | திரு24-28 | சித்60 | சர்வத்திர அமாவாசை |
| 30 | 14 | சனி | அமா0-55<br>பிர59-23 | புன25-33 | சித்60 | ஆஷாட சுத்தம், அவமா கம் |
| 31 | 15 | ஞா | துதி57-5 | பூச25-33 | சித்60 | சந்திரதரிசனம், காதுகு த்த,வித்யாரம்பம் செய் |

1923௵ ஜூலை௴

| | | | |
|---|---|---|---|
| | | சுக் புத | சூ செ |
| கே | 20௨ மிது-சு<br>,, மிது-புத<br>,, கட-செ | | |
| | | | ராகு |
| | | குரு | சனி |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE
" ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY ST., MADRAS.